
# சுமைதாங்கி




**ந.பாலேஸ்வரி**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விலை ரூபா 1-90

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந. பாலேஸ்வரி

எழுதிய

★ சுமைதாங்கி

★ இது தான் உலகம்

★ மகா தியாகி

★ எல்லைக் கோடு

★ டெரலின் ஷேட்

★ ஜெயந்தியின் தந்தி

ஆகிய சிறு கதைகள் அடங்கிய

# சு மை தா ங் கி

ஒரு

ந ரே சி வெ ளி யீ டு

முதற் பதிப்பு:- ஆடி, 1973

விலை - ரூ. 1/90

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

இருபதாம் நூற்றுண்டில் தோன்றி வளர்ந்து வரும் புதிய இலக்கியங்களுள் சிறுகதைகளும் நாவல்களும் பொது மக்கள் விரும்பிப் படிக்கும் அளவுக்கு சமுதாயத்தில் இடம் பெற்று வருகின்றன. சிறுகதை எழுத்தாளர்களும், நாவல் ஆசிரியர்களும் மக்கள் வாழ்கையில் புதிய திருப்பங்களை ஏற் படுத்திவரும் சிறந்த இலக்கிய சிறப்புக்களை அளித்து வரு கின்றனர். மேலைத்தேசத்தில் தோன்றி வளர்ந்து வரும் சிறுகதைகளினதும் நாவல்களினதும் ஆதிக்கம் உலக மெங்கும் சிறுகதைவளர்ச்சிக்கும் நாவல்களின் வளர்ச்சிக்கும் தூண்டு தலையும் வேகத்தையும் கொடுத்து வருவதன் பெறுபேருக ஈழத்திலும் சிறந்த சிறுகதை எழுத்தாளர்களும் நாவலா சிரியர்களும் தோன்றிப் பல அரிய படைப்புக்களை ஈழத் திற்கே உரிய சிறப்பியல்புகளுடனும், தனித்தன்மைகளுட னும் எழுதி வருவதை நாம் காணக் கூடியதாக இருக் கின்றது.

ஈழநாட்டின் இலக்கிய வளர்ச்சிக்குச் சிறந்த படைப் புக்களை அளித்து வரும் சிறுகதை ஆசிரியர்களுள் ஒருவராக விளங்குபவர் திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி ந. பாலேஸ்வரியாவர். இவர்கள் திருமணம் ஆவ தற்கு முன் பா. பாலேஸ்வரி என்னும் பெயரில் எழுதி வந்துள்ளார்கள். நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளையும், ஏழு நாவல்களையும் பல கட்டுரைகளையும் இதுவரை எழுதி மக் களின் பாராட்டைப் பெற்று வரும், திருமதி ந. பாலேஸ்வரி அவர்களின் சிறுகதைகளிற்பல வீரகேசரி, சுதந்திரன், ஈழ நாடு, கலைச்செல்வி, தினகரன், ஜோதி, தேனருவி, மங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுதம், தமிழின்பம், கற்பகம், கதம்பம், அஞ்சலி, விவேகி, சிந்தாமணி, சுடர்ஒளி போன்ற ஈழநாட்டு இதழ்களிலும் 'கல்வி', உமா, மலேஷியா தமிழ்மலர், பூந்தொட்டி போன்ற வெளி நாட்டுப் பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன.

'சுடர்விளக்கு' 'பூஜைக்குவந்த மலர்' என்னும் இரு நாவல்களும் பிரசுரமாகி மக்களின் பாராட்டை பெற்ற சிறந்த நாவல்களாகும். 'பூஜைக்கு வந்த மலர்' என்னும் நாவல் மூன்று மாதங்களுக்குள் இரு வெளியீடுகள் பிரசுரமாகி முடிவுற்றதைப் பார்க்கும்போது மக்களின் வரவேற்பு ஈழத்து இலக்கியப் படைப்புக்களுக்கு நிறைய உண்டு என்பதை பிரத்தியட்சமாக எடுத்துக்காட்டுகின்றது.

ஈழத்தின் சிறுகதை ஆசிரியையாக விளங்கும் திருமதி ந. பாலேஸ்வரி அவர்கள் தமிழ் ஆசிரியையாகப் பணிபுரிந்து கொண்டிருந்த போதும் தனது கடமைகளுக்கு மத்தியில் பல அரிய படைப்புக்களை இன்றும் தந்து கொண்டே இருக்கிறார்கள்.

இதுவரை அவர்கள் எழுதிய பத்திரிகைகளின் பிரசுரமாகிய கதைகளைத் தொகுத்து முதலாவது சிறுகதைத் தொகுதியாக வெளியிடுகிறார்கள். இச்சிறுகதைத் தொகுதியில் அவர்களின் உள்ளத் துடிப்புக்களும், கற்பனை வளமும், கதை எழுதும் ஆற்றலும் சிறந்து விளங்குவதைக் காணலாம். எளிய நடையில், இனிய தமிழில், ஈழநாட்டுக்கே உரிய பின்னணியில் அவர்கள் புனைந்திருக்கும் கதைகள் ஏற்கனவே பத்திரிகைகளில் மக்கள் படித்திருந்தவை என்றாலும் அவ்வருமையான படைப்புக்கள் நூலுருவம் பெற்று மக்கள் கைக்கு ஈழத்து இலக்கிய விருந்தாக வெளிவருவது மக்களின் விருப்பத்தை நிறைவேற்றும் அரும் பெரும் பணியாகும்.

ஆசிரியை ந. பாலேஸ்வரி அவர்களின் எழுத்துக்கு ஈழநாட்டில் நல்ல வரவேற்பு உண்டு என்பதை நான் அறிவேன். அவரின் இந்த முதலாவது சிறுகதைத் தொகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை வெளிவந்துள்ள ஈழத்துச் சிறுகதைத் தொகுதிகளோடு ஒப்பிட்டுப்பார்க்கவும் ஈழத்தின் சிருஷ்டி இலக்கியத்தைப் பிரதி பலித்துக் காட்டவும் கூடியதாகும்.

'சுமைதாங்கி' இதுதான் உலகம், மகாதியாகி, எல்லைக் கோடு, டெரலின்ஷேட், ஜெயந்தியின் தந்தி ஆகிய சிறுகதைகள் ந. பாலேஸ்வரியின் எழுத்தின் சிறப்பை என்றும் நினைவூட்டிக் கொண்டிருக்கும் படைப்புக்களாகத் திகழும் என்பது வாசகர் மத்தியில் உலவும் அபிப்பிராயமாகும்.

திருமதி ந. பாலேஸ்வரி அவர்களின் இம்முதல் சிறுகதைத் தொகுப்பு மக்களின் மிகுந்த ஆதரவைப் பெறுவதோடு, திருமதி பாலேஸ்வரி அவர்களுக்கு ஒரு நிரந்தர 'வாசகர் கூட்டத்தை' ஏற்படுத்தும் என்பது எனது திடமான நம்பிக்கை.

**அ. தங்கத்துரை**
*பாராளுமன்ற உறுப்பினர்*
*மூதூர்*

*கிளி வெட்டி*
*15-4-73*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசக நேயர்களுக்கு,

எனது படைப்புக்களான சுடர்விளக்கு, பூஜைக்கு வந்த மலர் ஆகிய நாவல்களுக்கும் பத்திரிகையில் வெளிவந்த ஏனைய தொடர் நவீனங்களுக்கும் நூற்றுக்குமதிகமான சிறு கதைகளுக்கும் ஆதரவு தந்த இலங்கை, இந்திய, மலேஷிய வாசக நேயர்களுக்கு யான் அளிக்கும் சிறு கதைத் தொகுதியே 'சுமைதாங்கி'

சிறுகதைத் தொகுதி வெளியிட்ட பின்பே அநேகமாக நாவல் வெளியிட முயற்சிப்பார்கள் சிலர். ஆனால் என்னைப் பொறுத்தவரை அது எதிர்மாறாக முடிந்து விட்டது. இரு நாவல்கள் புத்தகவடிவில் வெளியாகியபின்பே சிறு தைத் தொகுதி வெளியிடும் முயற்சியில் இறங்கியுள்ளேன்.

காரணம்......? வாசக நேயர்கள் என் படைப்புக்களுக்கு அளித்த வரவேற்பு என்று கூறட்டுமா...... அல்லது சந்தர்ப்ப வசத்தால் நாவல்கள் முதலில் வெளியாகும் சிறப்பைப் பெற்று விட்டன என்று கூறட்டுமா? எப்படியிருப்பினும் எனது மூன்றாவது வெளியீடான சிறு கதைத் தொகுதி 'சுமைதாங்கி' இதோ உங்கள் கரங்களுக்கு வந்து விட்டது. என்னை ஊக்குவித்த வாசக நேயர்களின் ஆதரவை இச்சிறு படைப்பு பெறத்தவறாது என்கிற பரிபூரண நம்பிக்கை எனக்குண்டு.

'சுமைதாங்கி' ஏற்றிருக்கும் சிறுகதைகள் முறையே வீரகேசரி, சிந்தாமணி, சுதந்திரன், கல்கி, தமிழின்பம், கலைச்செல்வி ஆகிய பத்திரிகைகளில் வெளி வந்தவை. 'சுமைதாங்கி' என்னும் சிறுகதை மலேஷியா பத்திரிகையான 'தமிழ் மலரில் மறுபிரசுரம் பெற்றது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

பல அலுவல்களின் மத்தியில் ஆறு கதைகளையும பொறுமையுடன் படித்து மதிப்புரை வழங்கிய பாராளுமன்ற உறுப்பினர் உயர்திரு அ. தங்கத்துரை அவர்களுக்கும், இதை அச்சேற்றிய யாழ்ப்பாணம் கூட்டுறவு அச்சகத்தினருக்கும் என் உள்ளங் கனிந்த நன்றி உரித்தாகுக.

தமிழ் அன்னையின் திருவடிகளில் நான் சமர்ப்பித்த மூன்றாவது மலர் இப்பொழுது உங்கள் கரங்களைச் சேர்ந்து விட்டது. மலரின் மென்மையை உணர்ந்து மலர் கசங்காது மலரின் நறுமணத்தை அநுபவிக்கும் பொறுப்பை உங்களிடம் விட்டு விடுகிறேன்.

நன்றி.

திருகோணமலை,
18-4-73

ந. பாலேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமைதாங்கி

கெட்டி மேளங் கொட்டத் தாரிணியின் கழுத்தில் தாலி கட்டி முடிகிறது. உச்ச ஸ்தாயியில் வாசித்துக் கொண்டிருந்த நாதசுர வித்துவான் சிறிது மூச்சிழுத்து விட்டுத் தனது இசையை ஆவாவர்ணத்தில் திருப்புகிறார். மணமக்களை வாழ்த்தி அறுகரிசி போடுவதற்காக மக்கள் நீண்ட 'கியூ' வரிசையில் நிற்கிறார்கள். அப்போது உள்ளே ஏதோ அலுவலாக நின்ற ரமணி ஓடி வந்து அந்த வரிசையின் முன் தொங்கலில் நின்று கொள்கிறாள். மணமக்களை வாழ்த்துவதைத் தானே முதலில் ஆரம்பித்து வைக்க வேண்டும் என்ற ஆதங்கம் அவள் முகத்தில் பிரதிபலிக்கிறது. சுற்றி இருப்பவர்களின் விழிகளெல்லாம் அவள் மேற்பதிகின்றன. அதையிட்டுக் கிஞ்சித்தும் அவள் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. புரோகிதரின் அழைப்பு... அதைத் தொடர்ந்து ரமணி வேகமாகப் புதுமணத்தம்பதிகளை நோக்கிச் செல்கிறாள். ஏதோ ஒன்றை வெற்றிகரமாக முடித்து விட்ட திருப்தி அவள் முகத்தில் பிரதிபலிக்கிறது.

மணப்பெண்ணின் அருகில் அவள் வந்து விட்டாள். பக்கத்தில் வெள்ளித் தட்டில் வைக்கப்பட்டிருக்கும் அறுகரிசியில் இரண்டு பிடியை இரண்டு கைகளும் கொள்ளாமல் அள்ளிப் 'பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க!' என வாழ்த்தியபடி மணமக்களின்மேல் அரிசியை அவள் தூவி முடிக்கும்போது மணமகள் அவள் இரு கரங்களையும் இறுகப் பற்றிக் கொள்கிறாள். இருவரும் சில நிமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டம் செயலற்று நின்றபின் ரமணி தன் சுய உணர்வு வரப் பெற்றவளாய் தன்னைப்பற்றிய மணமகளின் கரங்களை அப்படியே எடுத்து மணமகனின் கரங்களுக்குட் திணித்து விட்டு 'விர்' என அப்பால் நடந்து செல்கிறாள்.

திடீர் என அவள் சிந்தனை வீட்டை நோக்கித் தாவு கிறது. அங்கே குற்றுயிராகக் கிடக்கும் தன் தம்பி முகுந் தனின் நினைவு அவளைப் பாடாய்ப்படுத்துகிறது. உடனடி யாக வீட்டுக்குச் சென்று விட வேண்டும் என்ற துடிப்பு உள்ளத்தை உலுப்புகிறது. ஆயினும் தாரிணியிடம் விடை பெறுமற்போக அவள் விரும்பவில்லை, அதனால் வாழ்த்து முடியும்வரை சுவரோடு சுவராக ஒட்டியபடி நின்று விடு கிறாள். மணக்கோலத்தில் இருக்கும் தாரிணியைப் பார்த்து அவள் விழிகள் ஆனந்தக் கண்ணீர் சொரிகின்றன. அவ ளுக்கு அப்படியொரு மகிழ்ச்சி ஏன்...நெகிழ்ச்சியுங் கூடத் தான்.

ஒரு படியாக வாழ்த்துப்படலம் முடிவடைய தாரிணி யிடம் விடை பெறுவதற்காக அவளை நோக்கி நடக்கி றாள் ரமணி. அவளிடம் எப்படிச் சொல்லி விடைபெறு வது... தாரிணி அவளைப் போக அநுமதிப்பாளா என்ற வினாக்கள் அவள் மனதில் ஒன்றின்பின் ஒன்றாக எழுந்த போதும் எப்படியோ துணிந்து சென்று தாரணியிடங் கேட்டு விடுகிறாள்! கேட்டே விடுகிறாள்!! அவள் குரல் குழைகிறது.

போகட்டுமா தாரிணி...?

எங்கே என்பதுபோல அவளைப் பார்க்கிறாள் தாரிணி.

'நீங்கள் புறப்படுமுன் நான் ஒருமுறை வீட்டுக்குச் சென்று வருகிறேன்...போகட்டுமா...?

எதற்காக இப்போ வீட்டுக்கு...? எங்களுடன் கூடவே வரலாமே... கழுத்தில் தாலியேறும் வரை காத்திருந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக்கும் என்னைப் பிரிவதற்கு... உன் மனநிலை அப்படியிருக்கும்போது நான் கூறுவதற்கென்ன இருக்கிறது...? உன் இஷ்டம் அதுவானால் போய் வா ரமணி!' தாரிணியின் கண்கள் ஆற்றாமையால் குளமாகின்றன. கண்ணில் இருந்து வழிந்தோடும் நீர் கண்மையுடன் கலந்த அவள் கன்னம் வழியே வடிகிறது. அவள் தன் கைக்குட்டையை எடுத்து நாசுக்காக அதை ஒற்றி விடுகிறாள்.

'தாரிணி... நீ என்னைப் புரிந்து கொண்டது அவ்வளவுதான் என்பதைத் தவிர வேறு எதையும் நான் குறிப்பிட விரும்பவில்லை. தயவு செய்து என்னை மன்னித்து விடு. நான் போய்த்தான் ஆக வேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டுள்ளது. வருகிறேன்...' திரும்பிப் பார்க்காமல் உடைந்த இதயத்துடன் நடந்து செல்கிறாள் ரமணி.

தாரிணியும் அவளும் சிநேகிதமானது இன்று நேற்றல்ல. பல்கலைக் கழகத்தில் படிக்கும்போது ஏற்பட்ட ஒரு பழக்கம் இப்படி நெருக்கமான உறவாக மாறி அவர்களைப் பின்னிப் பிணைத்தும் விட்டது. அந்தத் தூய்மையான நட்பு நிரந்தரமாக வேண்டும் என்ற கருணையினாற் போலும் ரமணியின் ஊரில் ரமணி படிப்பிக்கும் அதே பாடசாலையில் ஒரு வருடங் கழித்துத் தாரிணிக்கும் நியமனங் கிடைத்தது. பல்கலைக்கழகத்தில் இருந்து பிரியும் போது சுமையான இதயத்துடன் பிரிந்து கடித மூலம் உறவை வளர்த்து வந்த சிநேகிதிகளுக்கு இந்தச் செய்தி பெருமகிழ்ச்சியை அளித்ததில் வியப்பில்லை. ரமணியின் வேண்டுகோளைத் தட்ட முடியாமல் அவள் வீட்டிலேயே தங்கிக்கொண்டு பாடசாலைபோய் வந்தாள் தாரணி. ரமணி வீட்டில் அவள் தாயையும் அவளையும் இரண்டே வயது சிறியவனான முகுந்தனையும் விட மற்றவர்கள் எல்லோரும் வெளியூரில் உத்தியோகம் பார்த்து வந்தார்கள்.

ஆனால் ரமணி படித்த அளவுக்கு முகுந்தன் படிக்க மறுத்து விட்டான். சிரேஷ்ட வகுப்புடன் படிப்பை நிறுத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு அரசாங்கத்திற்கிடைத்த சிறு உத்தியோகத்துடன் திருப்திப்பட்டு விட்டான். அவனை உயர்தரக் கல்வி கற்பிக்க எடுத்த முயற்சிகள் எல்லாம் வீணாயின. தாரிணியும் ரமணியின் வீட்டுக்கு வந்து ஐந்து வருடங்கள் முடிந்து விட்டன விடுதலைக்கு மட்டும் தன் ஒன்று விட்ட மாமாவின் வீட்டுக்குப் போய் வரும் உறவினரற்ற தாரிணியை ரமணியின் அம்மாவுக்கு ரொம்பவும் பிடித்துப்போயிருந்தது. அதனால் தன் மகளைப்போல் தாரிணியையும் அவள் பாதுகாத்து வந்தாள்.

இடையில் ரமணிக்கு உத்தியோகம் கிடைத்த அடுத்த ஆண்டே திருமணமும் நடைபெற்று முடிந்தது. அந்தத் திருமணத்தின்போது தாரிணி ஓடி ஓடிச் செயற்பட்ட விதத்தைக் கண்டு ஊரே பொறாமைப்பட்டது. தன் சொந்தச் சகோதரிக்குத் தான் திருமணம் என்பதுபோல் அவள் விழுந்தடித்துப் பல இரவுகள் கண் விழித்துச் செய்தவற்றையெல்லாம் ரமணியால் இன்றுவரை மறக்க முடிந்ததில்லை. இத்தனைக்கும் அவள் ரமணியைவிட எண்ணி ஐந்து வயது சிறியவள். அப்படியிருந்தும் ஒருவித பாசம் அவளை அப்படி இயங்க வைத்தது. இந்தப் பெரிய கடமையைத் தீர்ப்பதற்கு தாரிணிக்கு ஒரு நல்ல கணவனைத் தேர்ந்தெடுத்து தானே முன்னின்று இத்திருமணத்தை நடத்தி வைப்பதே அவளுக்கு தான் செய்யும் சிறந்த கைமாறுகும் என அன்றே தீர்மானித்த ரமணிக்கு அப்படியொரு வரனைத் தேடுவது அத்தனை சுலபமாக இருக்கவில்லை.

அவள் மூன்று குழந்தைகளுக்குத் தாயான பின்பு கூட தாரிணி இப்படித் தனிமரமாக நிற்பதைக் காண அவள் மனந் துடித்தது. ஏன் தாரணியைத் தன் சொந்தச் சகோதரியாகவே மதித்து வந்த வாசு கூடத்தான் கலங்கினான். அப்போதுதான் அவர்களுக்கு முகுந்தன் ஒருவன் இருக்கிறான் என்ற நினைவு வந்திருக்க வேண்டும். பேசி வந்த திரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணங்களுக்கெல்லாம் மறுப்புச் சொல்லி வந்த அவனை யிட்டு இதுவரை கவலைப்பட்டு வந்த ரமணிக்கு அவன் இதுகாலவரை கட்டைப் பிரமசாரியாக இருந்ததுகூட இப்போது நல்லதுக்காகவே என்று பட்டது. அதனால் ஒருநாள் சந்தர்ப்பம் அறிந்து ரமணி வெளிப்படையாகவே தாரிணி யிடம் இதுபற்றிப் பிரஸ்தாபித்து விடுகிறாள். ஆனால் தாரிணி பட்டும் படாமலும் கூறிய பதிலிலிருந்து அது அவளுக்கு இஷ்டமில்லையென்பதை உணர்ந்து மெதுவாக அத்தோடு அப்பேச்சுக்கு முற்றுப்புள்ளியிட்டும் விடுகிறாள்.

நாட்கள் எதுவித மாற்றமுமின்றிக் கழிகின்றன. திடீர் என ஒருநாள் என்றுமில்லாதபடி பலத்த பீடிகை யோடு முகுந்தன் அவளிடம் விடுத்த வேண்டுகோள் அவளைத் திடுக்கிட வைக்கிறது.

ஆமாம்! தாரிணியின்மேல் தன் மனத்தில் தேக்கி வைத்திருந்த ஆசையையெல்லாம் மனந்திறந்து கூறி அதற்கு உதவி செய்யும்படி ரமணியை வேண்ட அவள் எதுவுமே செய்யமுடியாது அலமலருகிறாள். எப்படி இந்த இக்கட்டில் இருந்து தப்புவது என்ற சிந்தனையில் ஈடு பட்டு தாரிணி ஏற்கனவே யாரையோ காதலித்திருப்ப தாகப் பொய் சொல்லித் தப்பி விடுகிறாள். அதன்பின்பு முகுந்தனிடம் திடீர் எனக் காணப்பட்ட மாற்றங்களைக் கண்டு அவள் இதயம் வேதனைப்பட்டது. அவன் எதிலுமே பற்றற்றவன்போல் திரிந்த நிலைமை கண்டு அவள் பல முறை கண்ணீர் சிந்தினாள். ஆயினும் முகுந்தன் நல்லவன் என்பதும் தகாத இடத்து ஆசையைத் தானாகப்போகப் போக அகற்றிக்கொள்வான் என்பதும் அவளுக்குத் தெரிந் திருந்தால் அவனால் தாரிணிக்கு எதுவித துன்பமும் நடை பெறாது என்று கவலையற்றிருந்தாள்.

இப்போது அவள் கவனத்தையெல்லாம் தாரிணி தன் பால் ஈர்த்துக்கொண்டாள். முகுந்தனில் திடீர் எனத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றிய மாற்றத்தின் காரணத்தை தாரிணி ரமணியிடங் கேட்டபோதெல்லாம் அவன் யாரோ ஒரு உறவுப் பெண்ணைக் காதலித்துத் தோல்வி கண்டுவிட்டதாகத் தான் அவளால் கூற முடிந்தது. ஆனால் அந்தத் தோல்விக்குரிய காரணம் தானே என்பதைத் தாரிணி அறிந்து கொண்டால் நிட்சயமாக முகுந்தனுக்காக அவள் தன் வாழ்க்கையில் ஒரு தியாகத்தைச் செய்து விடுவாள் என்ற பயம் ரமணியை வாட்டவே செய்தது. ஒருவருக்காக ஒருவரின் வாழ்வு பலியாவதை அவள் எப்போதும் விரும்பியதில்லை. அதனால் தன் கணவன் வாசுவுடன் யோசித்து தாரிணிக்கு ஒரு நல்ல கணவனை அவள் விருப்பத்துடன் தெரிந்தெடுத்து திருமணமும் நடத்திவிட்டாள்.

கோயிலில் நடைபெற்ற திருமணத்திற்கு அவள் மணப் பெண்ணை அலங்கரித்து அழைத்துச்சென்ற பிற்பாடுதான் முகுந்தன் அப்படியொரு கோழைத்தனமான வேலையைச் செய்து விட்டான். ஆமாம்! காதல் செய்த ஆற்றாமையால் நச்சுத் திராவகம் அருந்தி விட்டான் என்று கேள்விப் பட்டதும் கோயிலில் நின்ற அவள் உடலும் உள்ளமும் பதறியபோதும் தன் பதற்றத்தைக் காட்டிக் கொள்ளாமல் தாரிணியின் திருமணம் எவ்வகையினும் தடைப்படக் கூடாது என்ற ஒரேயொரு நல்லெண்ணத்துடன் சகலதையும் தானே முன்னின்று நடத்தி வைத்தாள்.

அந்தத் திருப்தியில் சில மணிநேரம் முகுந்தனின் நிலையை அவளால் மறக்க முடிந்தது. தாரிணிக்கு இது விடயம் தெரிந்துவிடக்கூடாது என்று அவள் பட்டபாடு. இதோ முகுந்தனை அனுமதித்திருந்த வைத்தியசாலையை அடைந்து விட்டாள். அங்கே பூரண அமைதி நிலவுகிறது. சற்று முன் மணவீட்டில் நிலவிய ஆரவாரத்துடன் இந்தச் சூனிய அமைதியை ஒப்பிடுகிறது அவள் உள்ளம். 'ரமணி வந்து விட்டாயா...? முகுந்தன் நம்மைக் கைவிட்டுப் போய்விட்டான் அம்மா...' அவள் தாய் அலறிக்கொண்டே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடி வந்து ரமணியைக் கட்டிக் கொள்ளுகிருள். 'ஆ... என்ன... போய்விட்டாளு... ஐயோ முகுந்தா...!' அவள் தன் தாயுடன் சேர்ந்து அலறுகிருள். ஒரு நிமிடந்தான். அடுத்த நிமிடம் அவளைத் தொடர்ந்து வந்த அவள் கண வன் வாசுவையும் அழைத்துக்கொண்டு அவள் வெளியே செல்கிருள்.

தாரிணியின் திருமணம் எப்படியோ நடந்து முடிந்து விட்டதில் அவர்களுக்கு எவ்வளவோ நிம்மதி. ஆயின் புதுமணத் தம்பதிகள் முதல் முதலாக இப்படியான ஒரு அமங்கல நிகழ்ச்சியைக் காண்பதோ அன்றிப் பங்கு பற்று வதோ முற்றிலும் தவருனது என்பதை உணர்ந்து ஏதோ தங்களுக்குள் திட்டமிடுகிருர்கள். இப்படியொரு துர்ச் சம்பவம் நடந்திருக்காது விட்டிருந்தால் திருமணத்தின் பின் மணமக்கள் ரமணியின் வீட்டுக்கு வந்து ஒரு வாரந் தங்கிவிட்டு கணவனின் இல்லத்திற்குக் கொழும்பு போவ தாகவே திட்டமிடப்பட்டிருந்தது. ஆனுல் இந்த எதிர் பாராத நிகழ்ச்சியின் பின் எல்லாமே மாற்றியமைக்கப் பட வேண்டியதாயிருந்தது.

ரமணியும் அவள் கணவன் வாசுவும் கோயில் வாசலை நெருங்கியபோது திருமணச்சடங்கு எல்லாம் முடிந்து வீட் டுக்குச் செல்வதற்காக ரமணியின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர் மணமக்கள். அவர்களை நோக்கி ரமணி ஓட்டமும் நடையுமாகச் செல்கிருள். மண மக்களிடம் அவள் ஏதோ கூறி ஒரு மோட்டாரைக்காட்ட அவள் வேண்டுகோளைத் தட்ட முடியாது மணமக்கள் அதில் ஏறிப் பின் ஆசனத்தில் அமர்ந்து கொள்கிருர்கள் 'தாரிணி உனக்குத் தேன் நிலவுக்காக ஒரு உகந்த இடம் தெரிவு செய்து உங்கள் இருவரையும் பத்திரமாக அங்கு கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டு உடனடியாக அதே மோட் டாரில் திரும்பி வரும்படி என் கணவருக்குப் பணித்துள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளேன். 'இனித் திரும்பி வா' என்று நான் உனக்கு எழுதும் வரை நீ திரும்பி வரக்கூடாது. புரிந்ததா தாரிணி...? என்று சொல்லி அவள் பதிலை எதிர்க்காமலே மோட்டார் சாரதியிடம் அவள் சாடை காட்ட மோட்டார் வேகமாகப் புறப்படுகிறது.

தாரிணி எதுவுமே புரியாமல் தன் கணவனைப் பார்க்கிருள். அவன் ஏதோ மர்மமான நாடகம் பார்த்து முடிந்த பாவனையில் அவளைப் பார்க்கிருன். இதெல்லாம் என்னண்ணு குழப்பம்...? உங்கள் வீட்டில் எங்களைத் திட்டமிட்டபடி வரவேற்க ரமணி ஏன் தவறி விட்டாள். ஏதோ ஒரு சுமையை இறக்கி ஆறுதல் அடைவதுபோல அவளும் எனக்கு ஒரு திருமணத்தை முடித்து ஒரேயடியாகத் தன் பாரத்தை இறக்கிவிட்டிருக்கிருள். ரமணி இவ்வளவு கொடியவள் என்று நான் கனவுகூடக் கண்டதில்லை. பரவாயில்லை... இன்றல்ல அண்ணு இனி என்றும் நான் அவள் வீட்டுக்குத் திரும்பி வந்து எந்த விதக் கஷ்டத்தையும் தரப்போவதில்லை என்று தயவு செய்து நீங்கள் திரும்பியதும் முதல் வேலையாக அவளிடங் கூறி விடுங்கள்...' உணர்ச்சிவசப்பட்ட தாரணியின் நாக்குழறுகிறது.

'தாரிணி—எந்த விடயத்தையும் சிந்திக்காமல் ஒரு முடிவுக்கு வருவது எத்தனை பெரிய தவறு என்பதை நீயாகவே புரிந்து கொள்வாய். அவளை நீ இத்தனை வருட நட்பின் பின்பும் புரிந்து கொள்ளாமல் இருப்பதுதான் எனக்கு வேதனையாக இருக்கிறது. நீ நினைப்பதுபோல இல்லாமல் அவள் உண்மையிலேயே ஒரு சுமைதாங்கிதான்! ஆமாம் தாரிணி இன்று காலை அவள் அன்புச் சகோதரன் முகுந்தன் அகாலமரணம் அடைந்துவிட்டான் என்பது தெரிந்தபின்பும்கூட அதையெல்லாம் தன் இதயத்தில் சுமந்தபடி உன் திருமணத்தை நிறைவேற்றிய புதுமணப் பெண்ணுன நீ ஒரு அமங்கல நிகழ்ச்சிகளில் கலந்துகொள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளக்கூடாது என்ற ஒரு நல்லெண்ணத்தில் உனக்கு இதை ஒழுங்கு செய்தது குற்றமானுல் நீ கூறியபடி அவள் கொடியவள் தான்' என்று ஆத்திரத்தில் விளக்கங் கொடுத்த வாசுவை நீர் மல்குங் கண்களுடன் பார்த்தாள் தாரிணி.

'அண்ணு என்னை மன்னித்து விடுங்கள்! ரமணி— ஐயோ ரமணி...! உனது உண்மையான நட்பின்முன் பிறந்த சகோதர பாசங் கூடத் தோற்றுவிட்டதே. அப்படியான உன்னையா நான் கொடியவள் என்றேன்— ரமணி என்னை மன்னித்து விடு... மன்னித்து விடம்மா... அவள் தன் தலையில் பலமாக அடித்துக்கொள்கிருள். மோட்டர் போய்க்கொண்டே இருக்கிறது.

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது தான் உலகம்

கார்த்திகை மாதம் மழை கொட்டிக் கொண்டிருந் தது. கையிலே குடையில்லை. உள்ளது ஒரு பழைய அங்கி. பல இடங்களில் பொத்தல் விழுந்திருந்ததால் இத்தப் பெருமழையிலுருந்து என்னைக் காப்பாற்றும் சக்தி அதற் கில்லை.

மழை விடட்டும், போகலாம் என்றிருந்தேன். விடு கிறபாடாக இல்லை. கைக் கடிகாரத்தைத் திருப்பினேன். எட்டு அடிக்க இன்னும் பதினைந்து நிமிடங்கள் மட்டும் பாக்கி இருந்தன. இந்த நிலையில்தான் கொழும்புப்பட்ட ணத்தைச் சிறிது நினைக்கவேண்டியிருந்தது. நிமிடத்துக்கு ஆயிரம் 'டாக்ஸி' கிடைக்கக்கூடிய நிலையில் இந்த யாழ்ப் பாணத்தில் ஒரு மாட்டுவண்டி கூடக் கிடைப்பது மிகவும் சிரமமாக இருந்தது. எட்டுமணிக்குள் எப்படியாவது பாடசாலையை அடைந்துவிட வேண்டும். இல்லாவிட்டால் தலைமையாசிரியரிடமிருந்து தப்பவே முடியாது. பாடசா லைக் கட்டிடத்தோடு சேர்ந்து அமைக்கப்பட்ட அறையில் மனைவி மக்களுடன் குடியிருக்கும் அவருக்கு அரை மைல் தூரத்திலிருந்து கொட்டும் மழையிலும் கொழுத்தும் வெயிலிலும் நடந்து வரும் என்போன்றவர்களின் துன்பம் எங்கே தெரியப் போகிறது...?

பாவம்...?

அவரைக் குற்றம் சொல்லி என்ன பலன்? அவர் தம் முடைய கடமையைச் செய்துதானே ஆக வேண்டும்!

மேலும் தாமதிக்க விரும்பாமல் வேட்டியைத் தூக்கி முழங்கால் வரையில் மடித்துக் கட்டிக் கொண்டு பொத் தல் விழுந்திருந்த மழை அங்கியை இரண்டாக மடித்துத் தலையில் கட்டிக்கொண்டு தெருவில் இறங்கினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்துப் பனந்தோப்பிலே நுழைந்துபோனால் மூன்று நிமிடங்களில் பாடசாலையை அடைந்து விடலாம். தெருவைக் கடந்து போவதானால் குறைந்தது பத்து நிமிடங்களாவது பிடிக்கும். சுருக்கமான வழியைப் பிடிப்பதற்காகக் கலட்டிமுடக்கில் திரும்பிப் பனந்தோப்புக்குள் காலடி வைத்தேன்.

தண்ணீரைக் கிழித்துக்கொண்டு பாடசாலை மேட்டில் மிதந்தபோது பாடசாலை ஆரம்பமாவதற்கு இன்னும் சரியாகப் பத்து நிமிடங்கள் இருந்தன. பாடசாலையின் எதிர்ப்புறத்தே இருந்த செல்லனின் வாழைத் தோட்டக் கிணற்றடிக்குச் சென்று முழங்கால்வரை காலைக் கழுவிக் கொண்டு பாடசாலையை அடைந்து வகுப்புக்குள் நுழைந்தேன்.

ஓலையால் வேயப்பட்டிருந்த வகுப்பறையின் ஒரு மூலையில் இரண்டு கைகளாலும் மார்பை இறுக்கிப் பிடித்துக் கொண்டு குளிரில் நடுங்கிக் கொண்டிருந்த சங்கர் என்னை கவர்ந்தான்.

இடுப்பில் அதுவரையில் கட்டியிருந்த துணியைப் பக்குவமாக மடித்துப் பக்கத்துக் கதிரையில் போட்டுவிட்டு சங்கர் நின்ற திசையை நோக்கி நடந்தேன்.

மழையில் தோய்ந்து போயிருந்த அவனது சுருளான கேசத்திலிருந்து நீர் சொட்டிக் கொண்டிருந்தது. தெப்பமாக நனைந்திருந்த அவனுடைய உடை உடம்போடு ஒட்டிப்போய்க் கிடந்தது.

என் சட்டைப் பைக்குள் கைவிட்டுக் கைக்குட்டையை எடுத்து அவனுடைய முகத்தைத் துடைத்தேன். நன்றியறிதலுடன் அவன் என்னைப்பார்த்த பார்வை மின் வெட்டும் நேரத்தில் உள்ளத்தில் கடந்து போன ஒரு நிகழ்ச்சியை ஞாபகப்படுத்தி விட்டது.

மூன்றாண்டுகளுக்கு முன், நான் கழுத்துறையில் ஒரு கத்தோலிக்க மிஷன் பாடசாலையில் ஆசிரியனாகக் கடமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாற்றிக் கொண்டிருந்தேன். அங்கே கடமையாற்றிய முப்பது ஆசிரியர்களில் என்னையும் சேர்த்து மூவரைத் தவிர ஏனைய அத்தனை பேரும் சிங்களச் சகோதரர்கள்.

ஆசைக்குத் தமிழ்மொழி கேட்பதே மிகவும் அரிதாக இருந்தது. இரண்டொரு மாதங்களில் ஓரளவுக்குச் சிங்களம் பேசவும் எழுதவும் கற்றுக் கொண்டேன். சிங்களம் தெரியாமல் அங்கு காலங்கழிப்பது மிகவும் கஷ்டமாக இருந்தது.

1957-ம் ஆண்டு இலங்கைச் சரித்திரத்தில் என்றுமே இடம்பெற்றிராத கோர சம்பவம் ஒன்று நடைபெற்றது. எங்கெங்கு தமிழர்கள் காணப்பட்டார்களோ, அங்கெல்லாம் அவர்கள் உயிரோடு சித்திரவதை செய்யப்பட்டார்கள்.

பாடசாலை விடுதியில் இருந்த எனக்கும் இந்தச் செய்தி எட்டத் தவறவில்லை.

சுபாவத்திலேயே நான் மிகவும் பயந்தவன். இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டதும் என் உடல் பதறியது. செய்வதென்ன வென்றறியாமல் திகைத்தேன். என்னோடு கடமையாற்றிய எனக்கு மிகவும் வேண்டிய சிங்கள நண்பர் ஒருவரின் உதவியோடு மேல்மாடியில் சென்று மறைந்துகொண்டேன்.

இரண்டு நிமிடங்கள் சென்றிருக்கும். நான் மறைந்திருந்த மாடியின் கீழ்த்தளத்தில் ஒரே ஆரவாரம். நான் இருந்த அறைக்கதவின் நீக்கலால் கீழே பார்த்தேன்.

ஒரு பெரிய கூட்டம் கத்தி, கோடரி, துவக்கு, தடி ஏந்தி நின்றது.

''தமிழர்களை வெளியே அனுப்பு'' என்று சிங்களத்தில் முழங்கினர்கள்.

என் உடலில் இருந்த உரோமம் ஒவ்வொன்றும் பயத்தினல் குத்திட்டு நின்றது. உடல் பதறியது. பயத்தினல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லும் பல்லும் சேர்ந்து அடிபட்ட சத்தம் என் காதுக்குக் கேட்டது.

செய்வதறியாது என் எதிரில் சோகமே உருவாக நின்ற நண்பன் எட்வேட்டைப் பார்த்தேன்.

''மகே! அம்மே! செல்லத்துரை இவருய்!''

சிங்கள மொழியில், செல்லத்துரை முடிந்துவிட்டான் என்று அலறினுன் நண்பன்.

உடல் 'படபட' வென்று நடுங்க ஓரடி முன்வைத்து மீண்டும் என் பார்வையைக் கதவு நீக்கலால் கீழே செலுத்தினேன். ஐயோ! என்ன கோரக் காட்சி! இப்படியும் மனிதாபிமானமற்ற கல்நெஞ்சர்கள் இந்த இருபதாம் நூற்ருண்டினும் வாழ்கிருர்களே என்று நினைக்க நெஞ்சம் துணுக்குற்றது.

அங்கே செல்லத்துரையின் உயிரற்ற சடலம் இரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தது. பக்கத்தில் ஒரு பெரிய சிவப்புத் தலைப்பாக் கட்டுடன் நின்ருன் ஒரு பெரிய இராட்சதன். அவன் கையில் இரத்தம் தோய்ந்த கட்டாரி ஒன்று இருந்தது.

என்னை மறந்து ''ஐயோ செல்லத்துரை!'' என்று கத்திவிட்டேன், அவ்வளவுதான் தெரியும்! அடுத்து 'மள மள' என்று கற்கள் பறந்து வந்தன மாடிக்கு.

''மாடியில் இருப்பவன் கீழே வா! அல்லது நாங்களே அங்கு வந்துவிடுவோம்.'' இன வேற்றுமை அதிபயங்கர ஒலிகள் மூலம் வெளிவந்தது.

பயத்தால் என்னுடைய முகம் வெளுப்பேறியது. கை கால்கள் உதறல் எடுத்தன. வாயடைத்துப்போய் விட்டது!

என் நண்பன் எட்வேட்டைப் பார்த்தேன் பரிதாபமாக. அவன் என்னைப் பார்த்தான். இருவரும் பேசவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசியில் என் கையைப் பிடித்துக் கரகரவென்று இழுத்துக் கொண்டு போய்ப் பின்புறக் கதவைத் திறந்து, ''எங்கேயாவது தப்பியோடு!'' என்று அனுப்பிவைத்தான் நண்பன்.

உயிரைக் கையிலே பிடித்துக்கொண்டு படபடக்கும் நெஞ்சுடன் கடைசிப் படியில் கால் வைத்து விட்டேன். சுற்றும் முற்றும் பார்த்தேன். யாருமே என்னைக் காண வில்லை. 'பிழைத்தேன்' என்ற துணிவோடு திரும்பிப் பார்த்து ஓட்டம் பிடித்தேன்.

புகையிரத நிலயத்தை அடைந்தபோது, எனக்குக் கீழ் மூச்சு வாங்கியது. பின்புறம் திரும்பித் திரும்பிப் பார்த்து ஓடியதில் கழுத்து வேறு அமுக்கிக் கொண்டது.

''அப்பாடா!'' என்ற பெருமூச்சோடு நண்பன் எட் வேட்டை ஒரு முறை நெஞ்சார வாழ்த்திக்கொண்டேன்.

புகையிரத நிலயத்தில் கூடி நின்ற அந்தப் பெரிய கூட்டத்தைக் கண்டபோது ஒரு கணப்பொழுது மறைந் திருந்த பயம் மீண்டும் என் உடலை உலுப்பியது. பக்கத் தில் நின்ற பத்திரிகை விற்கும் பையனிடம் ஒரு சிங்களப் பத்திரிகையை வாங்கி எடுத்துக் கொண்டு ரயில் பெட்டி யில் சென்று உட்கார்ந்தேன். அங்கும் சாரம் கிழிபட்டும் கேசம் கலைந்தும், அடியின் உக்கிரகத்தைத் தாங்க முடி யாத துயரத்தோடும் என்போன்ற பல தமிழன்பர்கள் காட்சியளித்தார்கள்.

நான் ஒதுக்குப்புறமான இடத்தில் ஒரு சிங்களச் சகோதரரின் அருகில் போய் உட்கார்ந்து கொண்டேன். ரயில் புறப்படுவதற்கு ஆயத்தமாக 'ஊ...ஊ' என்று ஒல மிட்டது. அதைத் தொடர்ந்து ரயில் பெட்டியில் ஓரே ஆரவாரம்.

''அங்கே என்ன சத்தம்?'' என்று பக்கத்தில் இருந்த நண்பர் ஒருவரிடம் சிங்களத்தில் வினவினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தமிழர்களுக்கு அடி விழுகிறது!'' என்று கூறினர் அவர்.

நான் தமிழன் இல்லை என்று காட்டுவதற்கு மிகவும் பிரயாசை எடுத்துக் கொண்டேன். அடுத்த பெட்டியில் அட்டகாசம் முடிந்ததும் என்னுடைய பெட்டிக்குள் நுழைந்தது அந்தக் காலிக் கூட்டம்.

எனக்குப் பயம் அதிகரித்தது. இருந்தும் தைரியத்தைக் கைவிடாமல் பத்திரிகையில் கண்ணேட்டத்தைச் செலுத்திக் குனிந்த தலை நிமிராமல் இருந்தேன்.

''ஒயா தெமிழத...?'' கையில் இருத்த பத்திரிகையைப் பிடுங்கி விட்டுக் கேள்வி போட்டது ஒரு முரட்டுக் குரல்.

''நான் சிங்களவன்!'' சிங்களத்தில் பதில் கொடுத்தேன். ஒருவித அசட்டுத் தைரியம் என்னை ஆட்கொண்டது.

அவர்களுக்கு அப்பொழுது நம்பிக்கை பிறக்கவில்லை. அடுத்துப் பரீட்சை ஆரம்பமாகியது.

பத்திரிகையில் ஒரு பந்தியைக் காட்டி வாசிக்கும்படி கட்டளையிடப்பட்டேன். அருமையாக வாசித்துத் தள்ளினேன்.

காதைப் பிடித்துப் பார்த்தார்கள்.

நல்ல காலம்! நான் ஒரு கிறிஸ்தவன். பேசாமல் திரும்பி விட்டனர். நான் ஆண்டவனை மனதார வேண்டிக் கொண்டேன்.

ரயில் புறப்பட்டது. கூடவே என் பயமும் அதிகரித்தது.

புகையிரத ஸ்தானத்தில் நடைபெற்ற கோரச் சம்பவங்களை நினைத்து நினைத்து நெஞ்சம் புண்ணுகிக் கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் விரைவாகச் சென்றுகொண்டிருந்த புகையிரதம் திடீரென்று நின்றது. எட்டிப் பார்த்தேன்.

அது ஒரு புகையிரத ஸ்தானம். பாணந்துறை என்று கொட்டை எழுத்தில் போடப்பட்டிருந்தது. ரயில் நின்றதோ இல்லையோ. திடும் என்று பெட்டிக்குள் பிரவேசித்தது ஒரு வெறியர் கூட்டம்.

அங்கேயிருந்த ஓரிரு தமிழருக்குக் கிடைத்த மரியாதையைப் பார்த்தபோது அடுத்து எனக்கு என்ன நடக்குமோ என்ற பயம் என்னைக் கவ்விக் கொண்டது. அந்த வெறியர் கூட்டம் கடைசியில் என்னிடம் திரும்பியது.

அவர்கள் சரமாரியாகக் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் சிங்களத்தில் தடையில்லாமல் பதிலளித்தேன்.

அவர்களுக்கு அப்போதும் என் மீது நம்பிக்கை பிறக்கவில்லை. ஒருவன் தன் கையை விட்டு என் சட்டைப் பைக்குள் இருந்த பொருள்களை வெளியே எடுத்தான். அவற்றோடு சேர்ந்து வந்தது என் நாட்குறிப்பு.

என் அந்திம காலம் நெருங்கி விட்டதை அறிவித்தது அந்த நாட்குறிப்பு. பக்கத்தில் நின்றவன் கீழேவிழுந்த நாட்குறிப்பை எடுத்து விரித்தான். அவ்வளவுதான் தெரியும்; என் உடலை அடியும் உதையும் பதம்பார்த்தன. இருவர் என்னைப்பிடித்து இழுத்து வெளியே தள்ளினார்கள். கீழே பிளாட்பாரத்தில் என்னை ஒரு பெரிய கூட்டம் சூழ்ந்து கொண்டது.

'எடு பெட்ரோலை' என்றது ஓர் அதிகாரக் குரல்.

என்னுடைய வாழ்க்கையின் கடைசி அத்தியாயம் முடியப் போகிறது என்ற நினைவில் என் பெற்றோரை ஒருமுறை மனதார நினைத்துக் கொண்டேன்.

என் தலையில் ஒரு 'டின்' பெட்ரோல் ஊற்றப்பட்டது. தலை மயிரிலிருந்து சொட்டுச் சொட்டாக வடிவதை என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞல் உணர முடிந்தது. இரண்டு கண்களையும் இறுக மூடிக் கொண்டு இரண்டு கைகளையும் குவித்து இறைவனை வேண் டிக் கொண்டேன்.

தீப்பெட்டி அவர்களில் ஒருவரிடமும் இருக்கவில்லை யோ, அல்லது அந்தக் கூட்டத்தில் கூட இளகிய நெஞ் சம் உள்ளவர்கள் இருந்தார்களோ, தெரியவில்லை. அவர் கள் பேச்சிலிருந்து தீப்பெட்டி இல்லை என்பதுமட்டும் திட்டவட்டமாகத் தெரிந்தது.

திடீரென்று 'கிறீச்' என்ற மோட்டார்ச் சத்தம் கேட் டது. அதைத்தொடர்ந்து 'டுமீல் டுமீல்' என்ற துப் பாக்கி வெடி பாய்ந்தது. பல திசைகளிலும் தடுமாறி ஓடும் காலடிச் சத்தம் கேட்டது.

இதமான ஒரு கரம் என்னைத் தடவிக் கொடுத்தது. கைக் குட்டையால் என் முகத்தைத் துடைத்துவிட்ட கரத்தை அன்போடு பற்றிக்கொண்டு மூடியிருந்த கண்க ளைத் திறந்தேன். சில போலீஸ்காரர்கள் புடைசூழ என் னைக் கட்டியணைத்தபடி நின்முன் என் நண்பன் எட்வேட்.

அப்படியே அவன் பாதங்களில் விழுந்து அவனை வணங்கினேன். "இதுதான் உலகம் அப்பா!" என்று யாரோ அறிவுறுத்துவதுபோல் இருந்தது. விஷம் உடைய நாகத்திடம் தானே மாணிக்கமும் உண்டு?

என் நண்பன் எட்வேட்டின் உதவியோடு யாழ்ப்பா ணம் அடைந்தேன். நான் பட்ட அடியின் வேகம் குறைய மூன்று மாதங்கள் சென்றன.

அடுத்த மூன்று மாதங்கள் வீட்டில் ஓய்வெடுத்தபின் எனக்கு யாழ்ப்பாணத்தில் அளவெட்டி என்னும் கிராமத் தில் வேலை கிடைத்தது.

சங்கரின் விம்மல் சிந்தனையைக் கலைத்தது.

"சங்கர்! அழாதேப்பா. வீட்டுக்கு ஓடிப்போய் உடை யை மாற்றிக்கொண்டு வா!" என்றேன் அன்போடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் சொன்ன பதில் என்னைத் திகைக்க வைத்தது. அவனிடம் உடுத்தியிருந்த உடையைத் தவிர வேறு கிடையாதாம்!

இந்த உலகத்தை ஒரு முறை எண்ணிப் பார்த்தேன். பல உடைகளை வைத்துக் கொண்டு அடுத்த நேரம் எதை உடுப்பது என்று தடுமாறுகிறார்கள் ஒரு சாரார். போட்டிருக்கும் உடைக்கு மாற்றுடை இல்லையே என்று ஏங்குகிறார்கள் இன்னுமொரு சாரார்.

அவனை அழைத்துக் கொண்டுபோய் எனது உத்தரீயத்தை எடுத்துக் கொடுத்தேன் மாற்றிக்கொள்ளும்படி.

அவன்மேல் எனக்கு வந்தநாளாக ஒரு தனி அன்பு வகுப்பில் மிகுந்த சுட்டி, அடக்க மானவன். ஆனால் ஏழை என்பவைதான் நான் அவனைப்பற்றிப் புரிந்து கொண்டவை. அன்றையப்பொழுது எப்படியோ கழிந்தது.

மூன்றும் நாள்! எங்கள் பாடசாலையில் ஒரே ஆரவாரம். அன்று பெற்றோர் தினவிழாக் கொண்டாட ஆயத்தப்படுத்தியிருந்தார்கள். அன்று பரிசு பெறப்போகும் மாணவரின் பெயர்ப் பட்டியலைப் பார்த்தேன்.

அந்தப் பட்டியலில் சங்கர் என்ற பெயரும் அதன் பக்கத்தில் ஒரு சிறு இடைவெளி விட்டு ஆறு பரிசுகள் என்றும் எழுதப்பட்டிருந்தன. மாலை ஆறு மணிக்குப் பெற்றோர் தினவிழா ஆரம்பமாகவிருந்தது. மணி ஐந்தாகியிருந்தது. பரிசு பெறும் மாணவர்களில் சங்கரைத்தவிர ஏனைய மாணவர்கள் எல்லாரும் பிரசன்னமாயிருந்தார்கள்; சங்கர் வருவதாகக் காணோம். நேரம் போய்க் கொண்டிருந்தது. அவன் வீட்டை நோக்கி நடந்தேன்.

மாமரங்கள் அடர்ந்திருந்த சோலையின் நடுவே ஓலையால் வேயப்பட்டிருந்த ஒரு சிறு குடிசையில் கிழிந்து போன பாய் ஒன்றின்மேல் அமர்ந்திருந்தான் அவன்.

''சங்கர்!'' என்று குரல் கொடுத்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஸார் ! நீங்களா...?" என்று பதற்றத்துடன் கேட்டான் அவன்.

"ஆமாம் சங்கர்! நீ ஏன் இன்னும் வரவில்லை என்று பார்த்து விட்டுப் போகலாமென்று வந்தேன்...."

"எனக்கு உடை நல்லாயில்லை சார்!" விம்மலுக்கிடையே பதில் வந்தது.

"பூ! இவ்வளவுதானா? இதை நீ ஏன் நேற்றே கூறவில்லை?" என்று ஆறுதலாகக் கூறி அவனை அழைத்துக் கொண்டு ஒரு கடைக்குள் சென்றேன்.

அவனுக்குப் பிடித்த ஒரு கால்சட்டையும் அதற்கேற்ற ஒரு சில்க் சட்டையும் வாங்கிய பிறகு இருவரும் பாடசாலையை நோக்கி வேகமாக நடந்தோம்.

பெற்றோர் தின விழா அப்போதுதான் ஆரம்பமாகியிருந்தது. என் மனங்கவர்ந்த சங்கரின் குடும்ப வரலாற்றை அறிய மிகவும் ஆவலாக இருக்கவே, "சங்கர்!" என்றேன்

"ஸார்!" என்றான் அவன்.

"உனக்கு அப்பா இல்லையா?"

"உண்டு ஸார்!"

"அப்பா உயிருடன் இருந்துமா நீ இந்த நிலையில் இருக்கிறாய்?"

"அது பெரிய கதை ஸார்! கசப்பானது கூட" பெரிய மனிதனைப் போல் என் ஆவலைக் கிண்டி விட்டு அலுத்துக் கொண்டான் அவன்.

"பரவாயில்லை! உன் கதையை எனக்குச் சொல்லலாகாதா?" என்று அவனை ஆர்வத்தோடு பார்த்தேன்.

"நான் பிறந்த சில நாட்களிலேயே என்னையும் என் தாயாரையும் தவிக்கவிட்டு அவர் ஒரு பணக்காரப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணை மணந்து கொண்டார்; அவருக்கு மூன்று குழந்தைகள் கூட உண்டு ஸார்!''

என் நெஞ்சு துடித்தது. இப்படிக்கூட ஒரு தந்தை இருக்க முடியுமா என்ற எண்ணத்தில்.

''ஊரார் கூட இதை எதிர்க்கவில்லையா?'' என்றேன்.

''ஊருக்கும் உலகத்துக்கும் என்ன ஸார்? அவர்களைப் பொறுத்த வரையில் அவர் பெரிய மனிதர். பணமும் பதவியும் இருக்கும் வரையில் ஒருவர் குற்றத்தை எடுத்துக் கூற உலகம் ஒருநாளும் துணிவதில்லை: இன்று என் அப்பா இந்த ஊருக்கே ஒரு தலைவர்போலத் திகழ்கின்றார் ஸார்...!''

அநுபவப்பட்டவன் போல் ஒரு குட்டிப் பிரசங்கமே செய்துவிட்டான் சங்கர்.

''சங்கர்!'' என்றேன் கடுமையாக. ''ஒரு வேளை உங்கள் சரித்திரம் தெரியாத நிலையில் உலகம் அவரைக் கொண்டாடியிருக்கலாம்.''

''இல்லை; ஸார்! முழுக்க முழுக்கத் தெரிந்து கொண்டு தான் உலகம் அவருக்குப் புகழ்மாலை சூட்டுகிறது. அவரை எதிர்க்க, அவர் சொல்லைத் தட்ட இந்த ஊராருக்கு நெஞ்சுத் துணிவும் நேர்மைத்திறனும் கிடையாது ஸார்! கிடையாது.''

ஏமாற்றத்தின் எதிரொலி குரலில் தொனிக்கக் கூறினான். அந்தப் பதினான்கு வயதுப் பையனின் கதை என் உள்ளத்தை உருக்கியது.

''உன் அப்பா யார்...? அவர் பெயர் என்ன?'' என்று கேட்டேன் கதையோடு கதையாக.

''அதோ...!'' அவன் சுட்டிக்காட்டிய திசையை எட்டிப் பார்த்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் இதயமே ஒருமுறை நின்றுவிடும் போல் பயங் காட்டியது.

நான் மறுவார்த்தை பேசவில்லை. ''இது தான் உலகம்! வா, சங்கர்! நாம் போகலாம். அந்தத் தீயவனின் கையால் நீ பரிசுகூடப் பெறவேண்டாம்...வா, ராஜா !'' விம்மும் அவனை அணைத்தபடியே சென்று கொண்டிருந்தேன்.

அங்கே அன்றையப் பெற்றோர் தின விழாவுக்குத் தலைமை தாங்கிப் பரிசு கொடுக்க முன் வந்திருந்த பெரியார்தான் சங்கரைப் பெற்ற அப்பா என்பது நான் கூறாமலே உங்களுக்கு விளங்கி யிருக்குமே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகா தியாகி

பாடசாலையால் வந்த களைப்பு, மனதில் நிறைந்து ஊறிப்போயிருந்த கவலையின் பாரச்சுமை, தனிமை எல்லாமாகச் சேர்ந்து அவளைப் பிழிந்தெடுத்தன, இந்தப் பழுவின் சுமையைத் தாங்கமுடியாத நிலையில் படுக்கையையிற் சரண் புகுந்தாள் அவள்.

நித்திரை வருவதாக இல்லை. மனதிலே எழுந்த சிந்தனைச் சூழலில் இருந்து விடுபடுவதற்காகப் பக்கத்தில் இருந்த வானொலிப் பெட்டியைக் கொழும்பு வர்த்தக ஒலிபரப்புக்கு முடுக்கிவிட்டாள்.

அங்கிருந்து காற்றுடன் கலந்து வந்த சோககீதம் அவள் துன்பத்தை மேலும் அதிகரித்தது. வெறுப்புடன் பாட்டை நிறுத்திவிட்டுத் தலையணையின்கீழ் அரைவாசி படித்தபடியிருந்த காண்டேகரின் ''வெறுங்கோயில்'' என்ற நாவலை எடுத்துப் படிக்க முயன்றாள்.

பக்கங்கள் புரட்டப்பட்டனவே தவிர என்ன வாசித்தாள் என்பது அவளுக்கே புலனாகவில்லை. திரும்பவும் விட்ட இடத்தில் இருந்து ஆரம்பிப்பதும் இடையில் சிந்தனை எங்கோ சிறகடித்துப் பறப்பதும் இப்படி எத்தனை மணிநேரம் சென்றதோ.........

அவளுக்கே அவளுடைய செய்கை வேடிக்கையாக இருந்தது. இந்தநிலையில் 'திடீர்' என்று யாரோ கதவில் தட்டும் சத்தங்கேட்டு எழுந்து சென்று கதவைத் திறந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு ஜோடிக்கண்கள் ஒன்றையொன்று ஊடுருவிய மகாசக்தியில் அவளுக்கு எல்லாமே மறந்துவிட்டது.

வாய் பேசமுடியாமல் அடைத்துக்கொண்டது. உதடுகள் ஒன்றையொன்று கடித்துக்கொண்டன. கதவுத்திரைச் சீலையோடு கைகள் இரண்டும் பின்னிப் பிணைந்து கிடந்தன.

''என்ன ஜெயந்தி...... இந்த வேளையில் என்று யோசிக்கிருயாக்கும்? உனக்குக் கஷ்டமாக இருந்தால் நாளைக் காலையில் வந்து சந்திக்கிறேன்......'' அங்கே நிலவிய மௌனத்தைக் கிழித்தான் சங்கர்.

''இல்லை சங்கர்! உட்காருங்கள்; இந்த வேளையில் உங்களை எதிர்பார்க்கவில்லை என்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். ஆனுல் நீங்கள் வந்தது எனக்குக் கஷ்டம் என்பதைமட்டும் என்னுல் ஒத்துக்கொள்ள முடியாது. ஆமாம்! ஒத்துக்கொள்ளவே முடியாது.''

மறுவார்த்தையின்றி உட்கார்ந்தான் சங்கர். அங்கே மீண்டும் மௌனம் நிழலாடியது.

''ஜெயந்தி! நான் எதற்காக இந்த நேரத்தில் உன்னைத் தேடி வந்தேன் தெரியுமா......?'' அவளைக் கேள்விக்குறியோடு பார்த்தான் அவன்.

நான் என்ன சாஸ்திரமா படித்திருக்கிறேன்......? உங்கள் உள்ளத்தில் உள்ளதை எடுத்துச் சொல்வதற்கு...?'' அவள் பேச்சில் கனிவு குழைந்தது.

அவன் அவளை ஊடுருவிப் பார்த்தான். அவள் கண்கள் ஏதோ சிந்தனையிலாழந்து பூமியை வட்டமிட்டன.

அவன் 'திடும்' என்று ஏதோ நினைத்துக்கொண்டவனுய் சட்டைப் பையில் பத்திரமாக மறைத்து வைத்திருந்த ஒரு பெரிய காகித உறையை எடுத்து அவளிடம் நீட்டினுன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன கடிதமா? பேசமுடியாதவற்றிற்கு எழுத்தில் விளக்கமாக்கும்......? சுலபந்தானே.'' என்ருள் குறும்புடன்.

''ஊஹூம்! அதற்குள் படம்'' என்ருன் அவன்.

''ஓ சமீபத்தில் எடுத்துக்கொண்டீர்களாக்கும்!'' என்றவள் உறையைப் பிரித்தாள்.

அதற்குள் இருந்து அவள் மடியில் விழுந்தன ஐந்தாறு புகைப்படங்கள். முகத்தில் குறுநகை தவழ அவனைக் கடைக்கண்ணுற் பார்த்தபடி ஒவ்வொன்ருகக் கையிலெடுத்தாள் அவள்.

''படங்கள்கூடச் சேர்க்கிறீர்களாக்கும்! எப்போ தொடக்கம் இந்தத் தொழில் ஆரம்பமானது......! எனக்கு இதுவரை தெரியாதே! ஏன் ஆண்கள் படம்மட்டுந்தான் சேர்த்துக்கொள்வீர்களோ? பெண்களோடு கோபமாக்கும்......?'' கொஞ்சிக் கொஞ்சிப் பேசினுள் அவள்.

என்னென்னமோ எல்லாம் பேசவேண்டும் என்று வந்த அவன் அவள் முன்னிலையில் பொம்மையாகினுன்.

''என்னிடங்கூட என் தோழிகளின் படம் நிறையக் கிடக்கு. காட்டட்டுமா?'' அவள் பேசிக்கொண்டே போனுள்.

''ஜெயந்தி நீ விளையாடுகிருய். இது விளையாடுவதற்கேற்ற சமயமல்ல. முதலில் கொஞ்சம் கவனமாக இருந்து நான் சொல்லப்போவதைக் கேள்'' அவன் அன்புக் கட்டளையிட்டான்.

அவள் தன்னைத் தயார் செய்துகொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

அவன் ஆரம்பித்தான்.

''இங்கே ஐந்து புகைப்படங்கள் இருக்கின்றன. எல்லாரும் சிறந்த உத்தியோகஸ்தர்கள். நல்ல கண்ணிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களில் உனக்கு யாரைப் பிடித்திருக்கிறது என்பதைமட்டும் நீ எனக்கு இப்போது சொல்ல வேண்டும்!''

''ஏன் யாருச்காவது மாப்பிள்ளை தேடுகிறீர்களோ! உங்களுக்குத்தான் அக்கை தங்கை கிடையாதே......? யாருக்காகத் தேடுகிறீர்கள். நான் அறியலாமா......? அவள் இடைமறித்துப் பேசினுள்.

''ஜெயந்தி கொஞ்சம் அமைதியாகத்தான் இருந்து கேளேன். எல்லாம் உனக்காகத்தான்!'' அவன் வாயில் இருந்து வார்த்தைகள் படபடத்தன.

''என்ன......!'' ஆச்சரியத்தோடு அவனைப் பார்த்து வினவினவள் தொடர்ந்து ''என்ஞல் உங்களுக்குத்தான் எவ்வளவு சிரமம். முன் கூட்டியே இதைப்பற்றி என்னி டம் ஒரு வார்த்தை கூறியிருந்தால்......'' அவள் முடிக்க வில்லை.

''ஜெயந்தி! நீ பெண்! தனியாக உன்ஞல் எத்தனை காலந்தான் வாழ முடியும்......? நான் சொல்வதைத் தட் டாமல் உன் விருப்பப்படி யாரையாவது......''

''சங்கர்! நான் ஒருவரைத்தான் விரும்பினேன். ஆஞல் என் விருப்பம்போல் எதுவும் நடைபெற முடிய வில்லை. இனி நான் இப்படியே கன்னியாக வாழத் துணிந்துவிட்டேன். தயவு செய்து என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள். உங்களுக்குக் கோடி புண்ணியம்!''

ஜெயந்தி! நீ விரும்பிய அந்த ஒருவர்தான் திருமணஞ் செய்து கொள்ளமுடியாத நிலையிலிருப்பதை நீ நன்ருக உணர்ந்துகொண்டபின்பும் ஏன் இந்தப் பிடிவாதம்? யாருக் காக நீ உன் வாழ்வை இப்படிப் பாழடித்துக்கொள்ள வேண்டும்......?'' அவன் பச்சாதாபத்துடன் வினவிஞன்.

''ம்'' ஒரு வரட்டுப் புன்னகையை உதிர்த்தவள் ''நான் விரும்பியவர், என் உயிரினும் மேலாக நேசித்தவர், தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்நாள் முழுவதையும் தன் நண்பருக்காகத் தியாகஞ் செய்துவிடத் துணிந்துவிட்டபோது, கேவலம்! என்னுடைய வாழ்க்கையை அப்படியான ஒரு உத்தமருக்காகத் தியாகஞ் செய்வதில் என்ன தவறு சங்கர்......?'' அவள் அழுத்தமாகப் பதிலளித்தாள்.

,'ஜெயந்தி! உன்னிடம் கடைசியாக இன்று கேட்கிறேன். உன் முடிவுதான் என்ன?'' நிதானமாகக் கேட்டான் அவன்.

''நான் இனித்திருமணமே செய்துகொள்ளப் போவதில்லை! இதுதான் என்றும் என் முடிவாக இருக்கும்.''

''ஜெயந்தி!'' ஆத்திரத்தோடு எழுந்தான் அவன். ''சரி நான் வருகிறேன்! இன்று நானும் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். இன்னும் இரண்டொரு நாளில் என் முடிவு என்ன என்பதை நீ கூட அறிந்து கொள்வாய். இப்போது நான் வருகிறேன் ஜெயந்தி.''

சங்கர் தாமதிக்கவில்லை. வெறி பிடித்தவன்போல் வெளியே நடந்தான்.

''ச...ங்......சங்...கர்!'' நாக்குழறியது. ஆனல் வார்த்தைகள், அவள் வாய்க்குள்ளேயே அடைபட்டுத் தவித்தன.

அவன் செல்வதையே கண் கொட்டாது பார்த்து நின்ற அவள் அவனுடைய உருவம் கண்ணுக்கெட்டாத் தூரத்திற் சென்று மறைந்ததும் எதையோ பறி கொடுத்தவள்போல மீண்டும் தன் படுக்கையில் வந்து விழுந்தாள்.

மின்வெட்டும் நேரத்தில் அவள் அகத்திரையில் ஏகப்பட்ட சிந்தனைக்குவியல்கள்.

அவள் சங்கரை மனமாரக் காதலித்தாள் அவனும் அவளைக் காதலித்தான். இருவர் காதலுக்கும் ஒரு விதமான இடையூறும் ஏற்படவில்லை. கதைகளில் ஏற்படுவதுபோல 'திடும்' என்று வில்லன்கூட வந்து குதிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனுல் விதி! ஆமாம் விதி குறுக்கிட்டது. அதை நினைத்துக்கொண்டால்......?

ஆமாம்! சங்கரரின் உற்ற நண்பன்தான் ஜெகதீசன். சங்கர் — ஜெயந்தி இவர்கள் உறவு வளர்வதற்கே காரணமாக இருந்தவன், உதவியாக இருந்தவன் ஜெகதீஸ் என்ருற்கூட அது மிகையாகாது.

ஒருநாள் கொழும்பில் இருந்து ஜெகதீசையும் கூட்டிக் கொண்டு ஜெயந்தியைப் பார்ப்பதற்காகக் கார்மூலம் புறப்பட்டான் சங்கர்.

வழித்துணைக்குத் தோட்டா நிரப்பிய ஒரு துப்பாக்கியும் கூடவே கொண்டுவந்தார்கள்.

இடையிலே ஒரு அடர்ந்த காடு. சங்கர் ஒரு வேட்டைப் பிரியன். அவன் வேட்டைக்குப் போகும் சமயமெல்லாம் குறுக்கே நின்று அவனைத் தடுத்து விடுவாள் ஜெயந்தி அவன் புறப்படும்போது துப்பாக்கி கொண்டு செல்ல அனுமதிப்பதேயில்லை அவள்.

ஆனுல் அன்று அவனைத் தடுக்க யாருமே இருக்க வில்லை. வழியில் விதியின் உருவில் ஒரு மான் குறுக்கிட்டது. உடனே அவர்கள் காரை நிறுத்திவிட்டு மானைத் தொடர்ந்தார்கள்.

மான் இவர்களை வெகுதூரம் உள்ளே அழைத்துச் சென்றுவிட்டது. சங்கர் முன்னும் ஜெகதீஸ் பின்னுமாக நடந்தபோது 'டுமீர்' என்று வெடிச்சத்தமும் அதைத் தொடர்ந்து 'அம்மா' என்று ஈனஸ்வரத்தில் ஒரு அலறலுங் கேட்டுத் திரும்பிய சங்கர் திடுக்கிட்டான்.

சில யார் தூரத்தில் ஜெகதீஸ் இரத்த வெள்ளத்தில் குற்றுயிராக மிதந்தான்.

சங்கருக்குப் பயத்தில் உடல் பதறியது. முகம் வெளுத்துச் செய்வதறியாது திகைத்தான். அவனுக்கு என்ன செய்வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்றே தெரியவில்லை. கடைசியாகத் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு அப்படியே அவனைத்தூக்கிக் காரில் போட்டபடி சமீபத்தில் இருந்த ஆஸ்பத்திரியை நோக்கி விரைந்தான்.

டாக்டரின் அபார திறமையால் ஜெகதீஸ் உயிர் தப்பினுன். ஆனுல் ஒரு காலையும் கண்ணையும் இழந்த நிலையிற் தான் அவன் வெளியுலகில் நடமாட முடிந்தது.

அவனைக் கட்டிக்கொண்டு சங்கர் கதறினுன், புரண்டான், அழுதான். விம்மி விம்மி மன்னிப்புக் கோரினுன்.

''பரவாயில்லைச் சங்கர்! என்னுடைய விதி இது. நீ கையில் பிடித்திருந்த துப்பாக்கி மரக்கிளையில் பட்டதும் வெடிக்க வேண்டுமா? பாய்ந்த குண்டு என்னைத் தாக்கியிருக்க வேண்டுமா? நீ வேண்டுமென்று செய்யவில்லையே! தவறுதலாக நடந்து விட்டது. நீ வீணுக மனதை அலட்டிக்கொள்ளாதே!'' என்று நண்பனைத் தேற்றினுன் ஜெகதீஸ்.

அன்று தன் நண்பனின் அவல நிலையைக் கண்ணுற்ற சங்கர் ஒரு திடசங்கற்பஞ் செய்து கொண்டான்.

அது... ஆமாம்! அதுதான் தன் நண்பனுக்காக அவன்தன் வாழ்வைத் தியாகஞ் செய்வது. தன் உயிர் உள்ளவரை ஜெகதீஸை வைத்துக்காப்பாற்றுவது இனி அவன் பொறுப்பு. ஜெகதீஸினிடம் தன் மனக்கருத்தையும் வெளியிட்டுவிட்டான்.

இதைக் கேட்டதும் ஜெயந்தி 'கோ' என்று கதறி அழுதாள்.

அவன் விட்டுக்கொடுக்கவில்லை. அவளுக்கு விளக்கந் தந்தான்.

''ஜெயந்தி என் நண்பனின் அவல நிலைக்குக் காரணம் நான். இந்நிலையில் நான் மட்டுந் திருமணம் செய்துகொண்டு மனைவி மக்களுடன் வாழ்வதைப் பார்த்தால் அவன் மனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனையால் துடிதுடிக்கும். என்னுடைய மனச்சாட்சி கூட இடங் கொடுக்காதே. சிறு குழந்தைமாதிரிப் பிடிவாதஞ் செய்யாதே ஜெயந்தி! நீ யாரையாவது மணந்து கொண்டு வாழத்தான் வேண்டும்......''

ஆமாம்! இன்றுகூட அதைக் கடைசி முறையாகக் கூறுவதற்காகத்தான் வந்திருந்தார் சங்கர்.

அவள் என்ன பச்சோந்தியா......? கேவலம்! வெறும் சிற்றின்பத்துக்காக மட்டும் அவள் அவனைக் காதலித்திருந்தால் அவன் கூறுவது நியாயமாக இருக்கும். ஆனால் அவளுக்கு வேண்டியதெல்லாம் அவனுடைய அன்பு. அந்த அன்புக்காக அவள் எப்படி வேண்டுமானாலுந் தன்னைத் தியாகஞ் செய்துகொள்ளத் தயார். அவன் ஒருவனிடம் இருந்துதான் அவள் அந்த அன்பைப் பெறமுடியும் !

''நானும் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன். இன்னும் இரண்டொரு நாளில் என் முடிவு என்ன என்பதை நீ கூட அறிந்துகொள்வாய்......''

அவன் இப்படிக் கூறியபோது அவள்கூட இதையேதான் திருப்பிச் சொல்ல நினைத்தாள்.

ஆனால் சொல்லவில்லை.

இப்போது அவளும் ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள், பலநாட் கஷ்டத்தின்பின் நேற்றுத்தான் அவளுக்கும் அந்த முடிவின்பலன் கிட்டியது.

அதற்கு மேலும் அவள் யோசிக்கவில்லை. யோசிக்கத்தான் என்ன இருக்கிறது...? வெள்ளம் தலைக்குமேல் வந்தபின் சாண் ஏறினலென்ன முழம் ஏறினலென்ன.

அவள் துணிந்துவிட்டாள். ஆமாம்! இப்போது அவள் தன்னுடைய வீட்டுவாசலில் ஒரு தோற்பையுடன் காத்து நின்ருள். காருக்காக. கைக்கடிகாரத்தைப் பார்த்தாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமானம் புறப்படுவதற்கு இன்னும் ஒன்றரை மணிநேரம் இருந்தது. அதற்குப்பின் அவள் இலங்கையை விட்டு வெகுதூரஞ் சென்று விடுவாள்.

உள்ளத்துடிப்புடன் அமைதியற்ற நிலையில் நின்றவள் அடிக்கொருமுறை தன் மார்பகத்திற் புதைத்து வைக்கப் பட்டிருந்த கடித உறை பத்திரமாக இருக்கிறதா என்று பார்த்துக்கொண்டாள்.

அதோ மோட்டர்கூட வந்து விட்டது. இனி அவளுடைய முடிவை, படைத்த பிரமனே வந்தாலும் தடுக்க முடியாது.

வாசலைத் தாண்டிக் கார் வளவுக்குள் நுழைவதற்குள் அவள் அவசரமாகக் கீழே இறங்கி இரண்டடி முன் நடந்து விட்டாள்.

'கிறீச்' என்ற சத்தத்துடன் அவள் பக்கத்தில் கார் வந்து நின்றதும் அதன் பின்கதவு அவசரமாகத் திறக்கப் பட்டு அதிலே இருந்து வெளி வந்தது ஓர் உருவம்.

அவள் அன்றுதான் அதிர்ச்சி என்பதை இன்னதென்று அறிந்து கொள்ள முடிந்தது. பூமியே இரண்டாகப் பிளந்து விழுங்கிவிட்டதுபோன்ற பிரமை.

கையில் அழுத்திப்பிடித்திருந்த தோற்பெட்டி பிடி நெகிழ்ந்து தானுகக் கீழே விழுந்தது.

இரண்டு கைகளையும் விரித்து அதற்குள் முகத்தைப் புதைத்துக்கொண்டு பக்கததில் இருந்த சுவர்க்கட்டில் சாய்ந்துகொண்டாள்.

''என்னை மன்னித்துவிடு ஜெயந்தி! பூஜைவேளையிற் கரடி புகுந்தமாதிரி.........!

கீழே விழுந்த பெட்டியைத் தூக்கி அவனிடம் நீட்டிய படி தயங்கித் தயங்கிப் பேசினுன் அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் எதுவுமே பேசவில்லை! பேசமுடியவில்லை!!

''தூரத்துப் பயணமாக்கும்......? உன் பயணத்தை இன்னுமொரு நாளைக்கு ஒத்திப்போட முடியாதா ஜெயந்தி...?''

கெஞ்சலாகக் கேட்டான் அவன்.

''என்றுமே இனி என் பயணத்தை நான் ஒத்திப் போட முடியாது. 'பிளேன்' கூட 'புக்' பண்ணி விட்டேன். இன்று நான் எப்படியும் போய்த்தான் ஆகவேண்டும். எனக்கு நேரமாகிறது விடை கொடுங்கள் சங்கர்!''

''நீ போகமுடியாது ஜெயந்தி! உன்னை நான் போக விடமாட்டேன்'' அழுத்தமாகக் கூறியபடி அவள் கரத்தை இறுகப்பற்றினன் அவன்.

''சங்கர்......!'' உணர்ச்சி வசப்பட்டி அழைத்தவள் அப்படியே அசையாது கற்சிலையாக நின்முள்.

''ஜெயந்தி! இப்படியே நிற்பதற்கு இது நேரமல்ல! உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்ல வந்தேன். முதலில் உன் இதயத்தை திடப்படுத்திக்கொள்... ஜெகதீசனைக் காணவில்லை...!''

''காணவில்லை...!'' அவள் அதிர்ச்சி மேலீட்டால் கல்லாகச் சமைந்தாள் ''அவர் எங்கே போயிருக்க முடியும்? ஒரு வேளை தற்கொலை......'' அவள் முடிக்கவில்லை.

''இல்லை ஜெயந்தி ஜெகதீஸ் உயிரோடுதான் இருக்கிருன். ஆனல் எங்கே என்பதுதான் தெரியவில்லை. முதலில் இக்கடிதத்தைப் படித்துப்பார். எல்லாம் தானுக விளங்கும்!''

அவன் தன் சட்டைப்பையில் இருந்த கடிதத்தை எடுத்து நீட்டினன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் அதை ஆர்வத்தோடு பறித்துப் பிரித்துப் படித்தாள். அவளுடைய உடலின் ஒவ்வொரு அணுவும் சந்தோஷத்தால் புளகாங்கிதமடைந்தது.

ஆருயிர் நண்ப!

என் ஒரு காலும் கண்ணும் கெட்டுப்போனதற்காக வாழ்க்கையைத் தியாகஞ் செய்துவிடத் துணிந்த ஒரு உத்தம நண்பனுக்காக என் உடலின் ஒவ்வொரு அவயவத்தையும் பணயம் வைத்தாற்கூட அது பிரமாதமில்லை.

நண்ப! உன்னிடம் பல முறை வேண்டிக்கொண்டேன் உன் முடிவை மாற்றிக்கொள்ளும்படி ஆனல் நீ பிடிவாதமாக மறுத்துவிட்டாய்.

நீ அருகில் இருக்கும் வரை ஜெயந்தியின் வாழ்வும் வீணுகப் பாழாகிவிடும் என்ற பயத்தினுல் என்னையும் அழைத்துக்கொண்டு யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் இலங்கையை விட்டே போகத் துணிந்து விட்டாய். என் பொருட்டு இருவரின் வாழ்க்கை பாழாவதை என் மனம் ஒப்பவில்லை, சங்கர்.

என்னுடைய விதி என்னை இப்படி ஆக்கிவிட்டது! அதற்காக நீயும் ஜெயந்தியும் வாழ்நாள் முழுவதும் துன்பக்கண்ணீர் வடிக்கவேண்டும் என்ற நியதியா......? முடியாது சங்கர்! நீ கண்டிப்பாக ஜெயந்தியை மணந்து கொண்டேயாக வேண்டும்! அதற்காகத்தான் நான் யாருக்குந் தெரியாமல் வீட்டை விட்டுப் போகிறேன். என்னை மன்னித்து விடு.

உங்கள் திருமண அழைப்பிதழ் கண்டால் நான் மீண்டுந் திரும்பி வருவேன் இல்லையென்ருல் இன்னும் இரண்டொரு நாளில் என் பிணம் ஆற்றிலோ குளத்திலோ மிதப்பதை நீ காணத்தான் போகிருய்.

உன் உயிர் நண்பன் ஜெகதீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஐயோ! ஜெகதீஸ் அண்ணு...!!'' ''நீங்கள் போகலாம்!'' அவளைக் குறும்புடன் பார்த்துக் கூறினுன் சங்கர்.

''சங்கர் என்னை மன்னித்து விடுங்கள்! நான் கூட இன்று விமானமூலம் வெளியூர் செல்லத்தான் திட்டமிட்டிருந்தேன். ஏதோ பெரிய தியாகம் செய்யப்போவதாக இறுமாந்தேன். ஆனுல் 'அண்ணுவின்' தியாகம் யாருக்குமே வர முடியாது அவர் ''மகாதியாகியேதான்''

''நல்ல சமயத்தில் நீங்கள் வந்து சேர்ந்தீர்கள். இன்னும் சிறிது பிந்தியிருந்தால் என்ன நடந்திருக்குமோ? முதலில் அண்ணுவைக் கண்டுபிடிக்க வழி தேடுங்கள் அவரில்லாமலா நம் திருமணம்...?''

''ஜெகதீஸை எங்கே தெடுவது என்பதுதான் பிரச்சனை...?'' சங்கர் அமைதியாகக் கூறினுன்.

''பூ! இதுகூட யோசிக்க வேண்டுமா? பத்திரிகையில் எங்கள் அழைப்பிதழைப் போட்டு விடுங்கள் அண்ணு தாளுகவே வந்து சேர்கிருர்''.

''ஜெயந்தி நீ சரியான ஆள்தான்'' அவள் கன்னத்தில் செல்லமாகத் தட்டினுன்.

''ம் இதெல்லாம் அப்புறம் முதலில் அழைப்பிதழ்!'' ஜெயந்தி செல்லமாகக் கூறி அவளேயும் அழைத்துக் கொண்டு பத்திரிகாலயத்திற்கு விரைந்தாள்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லைக்கோடு

'டிக்டிக்' என்ற அலாம் கடிகாரத்தின் ஒளியைவிட அந்த அறையில் பூரண அமைதி நிலவியது. இருட் கன்னியின் பார்வையில் சிக்கித் தவித்த அந்த அறையின் மத்தியில் அழகான விரிப்புடன் கூடிய படுக்கையில் இரண்டு உயிர்கள் நித்திரையின்றித் தவித்துக்கொண்டிருந்தன. ஆயினும் ஒருவர் நிலை ஒருவருக்குத் தெரியாத வகையில் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி உறங்குவதுபோற் பாவனை செய்ய அவர்கள் பட்டபாடு அவர்களுக்குத்தான் தெரியும். சுவரில் காற்றோட்டத்திற்காக அமைக்கப்பட்டிருந்த துவாரங்களினூடாக உள்ளே விழுந்தபின் நிலவின் கிரணங்களைவிட அந்த அறையில் இருள் மண்டிக் கிடந்தது.

டிக்டிக்! டிக்டிக்!! கடிகாரம் இயந்திரமாக இருந்தபோதும் தன் கடமையைச் செய்து கொண்டிருந்தது. அந்த ஒலியே ஒரு பயங்கரமான சூழ்நிலையை ஏற்படுத்தியது. அப்போது அதுவரை தூங்குவதாகப் பாவனை செய்த உருவங்களில் ஒன்று தன் பக்கத்திற் படுத்திருந்த உருவத்தை ஊன்றிக் கவனித்துவிட்டு அது நன்ருகத் தூங்கிக்கொண்டு இருக்கிறது என்ற நம்பிக்கையில் எழுந்து அறைக்கதவை ஓசைப் படாமற் திறந்துகொண்டு வெளியேறுகிறது.

அறையை விட்டு வெளியேறிய உருவம் அறைக்கதவை மெதுவாகச் சாத்திவிட்டு மிகவும் வேகமாக நடந்து மாடிப்படிகளில் ஏறிச் செல்கிறது. பாவம்! அதற்கு மற்ற உருவம் தன்னைத் பின் தொடர்வது தெரிய நியாயமில்லைத்

தான். அத்தனை அவசரத்துடன் அது சென்று கொண்டிருக்கிறது.

'அத்தான்...!' அந்த உருவத்தைக் கண்ட சிவகாமி தான் அலறினள்.

'உஷ்! சத்தம் போடாதே சிவசாமி நான் உன்னை ஒன்றும் செய்யவில்லை. ஆனால் தயவு செய்து நான் கேட்கப்போகும் கேள்விக்கு விளக்கமாகப் பதில் கூறு அதை மட்டும் எனக்காக அல்லாவிட்டாலும் உன் உடன்பிறந்த அக்காவுக்காகக் கூறு. உன் வயிற்றில் வளரும் சிசுவின் தந்தை யார் சிவகாமி...?

அந்தக் கேள்வி சிவகாமியை அப்படியே உலுப்பி எடுத்தது; அந்த வினவுக்கு மட்டும் அவளால் விடை அளிக்க முடிந்திருந்தால் எல்லாமே அப்போதே சுமுகமாக நடந்து முடிந்திருக்கும் அதற்கு விடை கூறத் தெரியாமல் அவள் எப்படிப் பதில் கூற முடியும்...?

அத்தான்... மீண்டும் அதே அலறல்.

'சிவகாமி என்னை வாழவிடு. எனக்கும் உன் அக்காவுக்கும் உன் வயிற்றில் வளரும் சிசுவால் ஏற்பட்டிருக்கும் தகராறுகளை நீ அறிந்திருந்தும் என்னை ஏன் இப்படி வதைக்கிருய். நான் உனக்கு என்ன குற்றம் செய்தேன்... நான் அறிய ஏதாவது குற்றஞ் செய்திருக்க முடியுமென்ருல் அது அன்று உன் கணவன் பார்த்திபனை உன் அனுமதியின்றி திருப்பியனுப்பினேனே. அதுவாகத்தான் இருக்கும். அன்றைய சம்பவத்திற்காக நான் எவ்வளவு தூரம் வருத்தப்படுகிறேன் தெரியுமா சிவகாமி...... தயவு செய்து அந்த குற்றத்திற்காக என்னை மன்னித்து என்னை வாழ விடு..."

"அத்தான்..."

'அப்படி அழைப்பதில் எந்தவித அர்த்தமுமே இல்லை சிவசாமி. தயவு செய்து உண்மையை என்னிடமாவது கூறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குப்பின் வேண்டுமானுல் உன் அக்கா நினைத்திருப் பதுபோல் உன் குழந்தைக்குச் சட்டப்படி நானே தந்தை யாகிறேன்.'

'அத்தான் தயவு செய்து என்னைக் கொல்லாதீர்கள்... நான் மிகவும் பலவீனப்பட்டிருக்கிறேன். எனக்கு இப்போ வேண்டியதெல்லாம் நிம்மதி. ஆகவே தயவு செய்து இவ் விடத்தை விட்டுப்போய் விடுங்கள்...... போய்விடுங்கள் அத்தான்.

'சிவசாமி நீ சுலபமாகக் கூறி விட்டாய்... நான் போய் விடலாம்... ஆனுல் எனக்கும் வேண்டுவது நிம்மதி தானே. நான் உன்னை ஒரு சகோதரி என்பதை விட வேறு கண்கொண்டு பார்த்ததுண்டா சிவகாமி...? அதற்காவது பதில் கூறு சிவகாமி.'

'அத்தான் நீங்கள் நிரபராதி... ஆனுல் அதை நான் மற்றவர் முன்னிலையிற் கூற முடியாமல் இருக்கிறேன். அதற்காக என்னை மன்னித்துவிடுங்கள்... அல்லது அக்காவை நான் அழைக்க வேண்டிய நிலை ஏற்படும்...... சிவகாமியின் வார்த்தைகள் குழறின.

'அக்கா! அந்த வார்த்தையைக் கூற உனக்கு வெட்க மாயில்லை...? அக்காமீது அத்தனை அன்பு... மோசக்காரி துரோகி சண்டாளி... குழந்தைபோல் வளர்த்துத் திரு மணம் செய்து கணவன் கைவிட்டு விட்டானே என்று பரி தாபப்பட்டு உன்னை வீட்டில் வைத்து அன்பு காட்டி எங் கள் உணர்ச்சிகளை அடக்கி தங்கை ஒருவள் வாழாமல் வீட்டில் இருக்கிருளே என்று பதிப்புக் கொடுத்து உன் மேல் அன்பு காட்டியதற்காக நீ எனக்குத் தரும் பரிசு...! பாதகி...

'என் கணவரை நான் சந்தேகிப்பது தெரிந்தும் எங் கள் எங்கள் இல்லற வாழ்வில் ஏற்பட்ட பெரும் பிரிவைக் கண்டபின்பும் 'அக்கா அவர் நிரபராதி' என்று கூறத் துணியாமல் செய்த குற்றத்தை அவர்மேல் சுமத்தி வாழத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிந்த நீயும் ஒரு பெண்ணு...? உன் குணத்தை அறிந்து தான் உன் கணவன்கூட உன்னைக் கைவிட்டுச் சென்ருன். இந்த நாடகத்தை அவன் எப்படிப் பொறுத்திருக்க முடியும். இப்போதே என் வீட்டை விட்டுப்போய் விடு...ம்... இன்னும் ஏன் நிற்கிருய்...' பின்னுல் வந்த உருவம் பேசித் தீர்த்தது.

'கோமதி...! மூடுவாயை... நீ எதற்காக இங்கே வந்தாய்... சிவகாமியை வீட்டைவிடடுத் துரத்த உனக்கு என்ன அதிகாரம் உண்டு... நீ கீழே போ...ம் போய்விடு கோமதி' அத்தான் என்று அழைக்கப்பட்ட கோமதியின் கணவன் கந்தசாமி தான் பேசினுன்.

'ம்! நல்ல கேள்வி கேட்டீர்கள்... நான் உங்கள் மனைவி என்ற உரிமையிற்தான் பேசினேன் இங்கு நான் மட்டும் இன்று வந்திராவிட்டால் இனி என்றுமே நீங்கள் என் சந்தேகத்திற்கு ஆளாகியிருப்பீர்கள். நான் வந்தது நல்லகாலம் என்று கூறுங்கள். இவளுடன் உங்களுக்கு என்ன பேச்சு வேண்டியிருக்கு... வாருங்கள் கீழே செல்லலாம்.

'ஆமாம்! அத்தான், அக்கா சொல்வதில் எவ்வளவோ நியாயமிருக்கிறது. நான் துரோகிதான் சண்டாளிதான் இல்லை யென்ருல் வளர்த்த கடா மார்ப்பில் பாய்வது போல நானே உங்கள் குடும்பத்திற் சச்சரவை உண்டு பண்ணியிருக்க மாட்டேன். பரவாயில்லை ஏசியது அக்கா தானே! கண்டிக்கவேண்டியவர் உரிமையுள்ளவர் தன் கடமையைச் செய்ததற்காக நான் ஆத்திரப்படப்போவதில்லை. அக்கா, அகால வேளையில் நான் வெளியே போகப் போவதில்லை. காலையில் நீங்கள் எழும்புவதற்குள் வீட்டைக் காலி செய்து விடுவேன். இந்த ஐந்து வருடகாலமும் என்னை வைத்துக் காப்பற்றியதற்கு என் நன்றி!... அதற்கு மேல் சிவகாமி பேசவில்லை. அவளாற் பேச முடியவில்லை. அவள் படுக்கையில் ஓடிச் சென்று முகம் புதைத்த போது அங்கே கேவலும் விசும் பலுமாக அறை மூழுவதும் வியாபித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகாமி தன் வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினுள். சிறுவயதிலே தகப்பனே இழந்தாள். அவள் நல்லகாலம் அவள் சகோதரி அப்போது திருமணம் செய்து குடும்பமாக வாழ்ந்ததால் சிவகாமியை ஆதரிக்க முடிந்தது. கோமதியின் கணவன் கந்தசாமியின் தூரத்து உறவினர்தான் பார்த்திபன். அவன் அடிக்கடி கோமதியின் வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருந்ததால் கந்தசாமியே அவனுடன் பேசி முடிவு செய்து சிவகாமியை அவனுக்குத் திருமணம் செய்து வைத்தான்.

திருமணம் முடிந்த ஈராண்டு காலம் குடும்பம் நல்ல சந்தோஷமாகத்தான் நடந்தது. பார்த்திபனேக் கணவ ளுக அடைந்ததில் சிவகாமி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே யில்லே.

ஆனுல் அதைத் தொடர்ந்து கெடுகாலம் வரப்போ வதை அப்போது சிவகாமி அறியவில்லே. திடீர் எனப் பார்த்திபன் குடிக்கத் தொடங்கினுன். அத்தோடு மாறி யது அவன் குணம். வீட்டுப் பொருள் தொடக்கம் சிவ காமியின் நகைகள் ஈருக முடிந்த பின் அவளேத் தனி யாக விட்டு அவன் எங்கோ சென்று விட்டான். நடுத் தெருவில் நிர்க்கதியாய் நின்றவளே அணேத்து ஆதரவு காட்டியவள் கோமதிதான்.

கிட்டத்தட்ட ஆறுமாதங்களின் பின் கந்தசாமியா கவே பார்த்திபனேத் தேடிச் சென்று அவனுக்கு எவ்வள வோ எடுத்துக் கூறி ஒருபடியாக சிவகாமியை சேர்த்துக் குடும்பம் நடத்த வைத்தான். ஆனுல் சிவகாமிக்கு நிம் மதியான வாழ்க்கை ஆறுமாதங்கூட நிலேக்கவில்லே. கோமதி எவ்வளவோ பாடுபட்டுச் சிவகாமிக்குச் செய்து போட்ட நகைகளே எல்லாம் ஒவ்வொன்ருக முடித்து விட்டு அவளே மீண்டும் விட்டுப் பிரிந்து விட்டான் பார்த்திபன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியே இரண்டாண்டுகள் சென்றன. பார்த்திபன் சென்ற இடமே தெரியவில்லை. சிலர் அவன் கடல் கடந்து சென்று விட்டதாகக் கூறினர், இன்னும் சிலர் அவன் வேலையைவிட்டு கொழும்பில் தனியார் கம்பெனி ஒன்றில் வேலை பார்ப்பதாகக் கூறினார்கள். ஆனாலும் கோமதியோ கந்தசாமியோ அவனைத்தேடுவதில் எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை!

நான்கு ஆண்டு இடைவெளிக்குப் பின் திடீர் என ஒரு நாள் பார்த்திபன் கோமதியின் வீட்டில் வந்து நின்ற போது அவனை வரவேற்பதைத் தவிர வேறு எதுவுமே அவர்களாற் செய்ய முடியவில்லை. இம்முறை அவனாகவே சிவகாமியுடன் திரும்பவும் குடும்பம் நடத்தப் போவ தாகக் கேட்டான்.

கோமதிக்கு பெரிய நிம்மதியாக இருந்தது. தங்கை ஒருத்தி வீட்டில் வாழாவெட்டியாக இருக்கும்போது தான் மட்டும் கணவனுடன் சிரித்துப் பேசுவது அவளுக்கு பிடிக் காத ஒன்றாக இருந்தது. ஆகவே அவள் கஷ்டப்பட்டு மீண்டும் வேண்டிய நகைகள் எல்லாம் கொடுத்து ஆசீர் வதித்து இருவரையும் அனுப்பி வைத்தாள்.

ஆனால் அவள் எதிர்பார்த்தது நடக்கவில்லை. ஆமாம்! பார்த்திபன் திருந்தி விட்டான் என்ற அவள் நம்பிக்கை மண்ணாயிற்று. ஆறுமாதங்களுக்குள் மீண்டும் நிர்க்கதியாய் விடப்பட்ட சிவகாமி கோமதியிடம் திரும்பி வந்த போது கோமதி வாய்விட்டே கதறி விட்டாள்.

அதன் பின் எச் சந்தர்ப்பத்திலும் இனிச் சிவகாமி பார்த்திபனுடன் வாழ்க்கை நடத்தப்போவதில்லை என தீர்மானிக்கப்பட்டது. சிவகாமியே இப்படியொரு தீர் மானத்தைக் கொண்டுவந்தபோது கோமதி கந்தசாமி இருவருமே திடுக்கிட்டனர்.

அதன் பின்பு பார்த்திபனுக்கு என்ன நடந்தது என்றே தெரியாமல் வாழ்ந்தார்கள் ஆனால் சில நாட்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் மீண்டும் ஒருநாள் பார்த்திபன் அவர்கள் வாயிலில் வந்து நின்றபோது கோமதியும் கந்தசாமியும் அவனை வாயாரத் திட்டி கலைத்து விட்டார்கள். சத்தங் கேட்டுச் சிவகாமி மேலேயிருந்து கீழே வருவதற்குள் பார்த்திபன் போயே விட்டான். நடந்ததை அறிந்த சிவகாமி அது பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை,

அடுத்தநாட்காலை அவள் வழமைபோல் சமையலுக்குப் பொருட்கள் வாங்குவதற்காகக் கடையை நோக்கி நடந்த போது இடையில் பார்த்திபன் அவளைச் சந்தித்தான். அவனைக் காணுததுபோல் சிவகாமி நடந்து செல்ல முற்பட்டபோது ''சிவகாமி.........! என்ற குரல் கேட்டுச் சிலைபோல நின்ருள். பார்த்திபனின் குரலுக்கு இத்தனை சக்தியா உண்டு? நினைத்தபோது அவளுக்கே வேடிக்கையாக இருந்தது. அந்த அழைப்பை மீறி அவளால் ஓரடி கூட எடுத்து வைக்க முடியவில்லை.

''என்னுடன் வந்துவிடு சிவகாமி'' என்று பார்த்திபன் அழைத்தபோது அதைத்தட்டக் கூடிய சக்தி அவளிடம் இருக்கவில்லை. அவன் முன்னிலையில் அவன் சொல்லை எப்போதுமே அசட்டை செய்ய அவளால் முடிந்ததில்லை. ''அக்காவிடம் சொல்லிக் கொள்ளாமல் வருவது அழகல்ல......ஆகவே அவர்களிடம் ஒரு வார்த்தை......'' அவள் முடிக்கவில்லை.

''அப்படியானுல் என்னுடன் நீ வரவே வேண்டாம் சிவகாமி. நீ என்னைச் சந்தித்தது அவர்களுக்கு தெரியவே கூடாது. பரவாயில்லை — வா...அடுத்த தெருவில் ஒரு நல்ல ஓட்டல் இருக்கிறது. அங்கே சில நிமிடநேரம் நிம்மதியாக இருந்து பேசலாம்''

இம்முறை அவள் எதிர்வார்த்தை பேச முடியாமல் அவனைப்பின் தொடர்ந்தாள்.

ஓட்டலில் இருவரும் ஒரு தனியறையில் அருகருகே அமர்ந்திருந்தனர். அங்கே கொண்டு வரப்பட்ட குளிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பானத்தை எடுத்து சிவகாமியின் உதட்டருகே பார்த்திபன் கொண்டு சென்றபோது சிவகாமி தன்னையே இழந்து விட்டாள்.

அவன் அன்புப் பிடிக்குள் அவள் கரங்கள் சிக்கிய போது அவளுக்கு உலகமே மறந்தது. இருவரும் ஒருவரையொருவர் இமைக்காமல் பார்த்தபோது அவர்கள் உதடுகள் ஒன்று சேரத் துடித்தன.

தன் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாத சிவகாமி பார்த்திபனின் மார்பில் சரண்புகுந்தாள். அடுத்த சில நிமிட நேரம் என்ன நேர்ந்தது என்று இருவருக்குமே தெரியாது.

சிலமணி நேர மயக்கத்தின் பின் கலைந்த தலைகளைச் சீர் செய்து கொண்டு மீண்டும் அடுத்த கிழமை இதே இடத்தில் சந்திப்பதான ஒழுங்குடன் இருவரும் இருவேறு திசைகளிற் சென்றனர். அன்று சிவகாமிக்கு சொர்க்கத்தின் நிழலில் நிற்பது போன்றதோர் உணர்ச்சி ஏற்பட்டது. பெற முடியாத எதையோ பெற்றுவிட்ட திருப்தியில் அவள் வீட்டை அடைந்தாள்.

அடுத்த வாரம் மீண்டும் அதே இடத்தில் இருவரும் சந்தித்தனர். இம்முறை அவர்களிடையே பிணைப்பு மிகவும் நெருக்கமாக இருந்தது. கால இடைவெளி குறுகியதாக இருந்தால் எந்த வித தயக்கத்திற்கும் இடமிருக்கவில்லை.

இம்முறை தனிக்குடித்தனம் நடத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்யும்படி சிவகாமி பார்த்திபனை மிகவும் உருக்கமாக வேண்டினாள். இன்னும் சில தினங்களில் அவளைப் பகிரங்கமாக அழைத்துப் போவதாக அவன் உறுதியளித்ததும் அவள் அவன் அன்புப்பிடிக்குள் சிக்கிக் கொண்டாள்.

இப்படியே பல சந்திப்புகள் நிகழ்ந்தன. இரண்டு மாதங்களின் பின் சிவகாமி தான் தாய்மை அடைந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருப்தை அவனிடம் கூறி உடனடியாக அவளை அழைத்துப் போகும்படி வேண்டுகோள் விடுத்த போது பார்த்திபன் சிறிது அதிர்ச்சியடையவே செய்தான். ஆயினும் அதை வெளிக்காட்டாமல் அடுத்த முறை சந்திக்கும் போது அதற்காகிய ஆயத்தங்களுடன் வருவதாகக் கூறி அன்றைய பொழுதை மிகவும் இன்பமாகக் கழித்து விட்டு சிவகாமியிடம் இருந்து விடை பெற்ருன்.

அவன் போவதையே இமை வெட்டாமற் பார்த்து நின்ற சிவகாமிக்குப் பாவம், அது தான் அவளது கடைசிச் சந்திப்பு என்பது தெரிந்திருக்க நியாயமில்லேத்தான்.

அடுத்த வாரம் அவள் ஒரு நாளும் இல்லாத குதூகலத்துடன் குறிப்பிட்ட இடத்தை அடைந்த போது அவள் அதிர்ச்சியடைந்தாள். வழி மேல் விழி வைத்துப் பார்த்து நிற்கும் பார்த்திபனை அன்று வெளியே காணவில்லை. அறையில் ஒழித்திருந்து தன்னை ஏமாற்றப்பார்க்கலாம் என்ற எண்ணத்தோடு ஓட்டலுக்குள் அடியெடுத்து வைத்தபோது அறைக்கதவு பூட்டுப் போட்டு மூடப்பட்டிருந்தது.

அவளுக்கு இப்போது எல்லாமே விளங்கி விட்டது. அவள் தன் அடிவயிற்றை பிடித்தபடி தெருவில் இறங்கி நடந்தாள்.

திருணமாகிக் குடும்பம் ஆரம்பித்த சில மாதங்களில் ஒரு குழந்தைக்காக அவள் வேண்டாத தெய்வங்கள் இல்லே. ஏறி இறங்காத கோயில்களும் இல்லே. ஆனல் இன்று அவள் வேண்டாத போது அவள் வயிற்றிலே குழந்தை...அவள் இனி எந்த முகத்துடன் அவள் அக்கா முகத்தில் விழிக்க முடியும்...?

இன்று தெரியாவிட்டாலும் நாளை எப்படியோ அவளுக்குத் தன் நிலேமை, புரியத்தான் போகிறது. அப்போது அவள் கேட்டால் இவள் என்னபதில் கூறமுடியும்...? அவளுக்கு ஒன்றுமே புரியாத நிலேயில் அவள் தன் வீட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்தாள். அன்று முதல் அவள் ஒரு நடைப் பிண மானாள்.

கோமதி தனது கணவன் தான் இத்தகைய குற்றத் தை செய்திருக்க வேண்டும் என்று நினைத்து அவனைக் கடிந்த போதெல்லாம் சிவகாமி உண்மையைக் கூறியிருக் கலாம். கூறத்தான் நினைத்தாள். ஆனால் கணவனைக் கயவனாக்க அவள் விரும்பவில்லை. அதனால் நடப்பது நடக்கட்டும் என்று மௌனம் சாதித்தாள். ஆயினும் ஒரு பூகம்பத்தை அவள் எந்த வேளையிலும் எதிர்பார்த் தே இருந்தாள். அவள் எதிர்பார்த்த பூகம்பமும் வெடித்து முடிந்து விட்டது. ஆனால் அதில் அவளுக்கு ஏற்பட்ட காயத்தின் வேதனையைத் தான் அவளால் பொறுக்க முடியவில்லை.

வாழ்க்கையில் எதற்கும் ஒரு எல்லையுண்டு என்பது அவளுக்குத் தெரியும் இப்போது அவளும் அந்த எல்லைக் கோட்டுக்கே வந்து விட்டாள். சிந்திப்பதற்கு முடியாத ஒரு தீர்க்கமான முடிவுக்கு அவள் வந்து விட்டாள். அதை இனிக்கடவுளே வந்தாலும் தடுக்க முடியாத அளவுக்குத் துணிவு பெற்று விட்டாள்.

அடுத்த நாட்காலை கந்தசாமியும் கோமதியும் முதலி ரவு நடந்த எதிரொலியின் காரணமாகச் சற்று நீண்ட நேரம் தூங்கி விழித்தவர்களாய்த் திடுக்கிட்டு மாடிப் படியைநோக்கி மேலே சென்ற போது சிவகாமி ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தாள். அவள் மார்பின் மேல் 'அக்கா வுக்கு' என்று முகவரியிடப்பட்ட கடிதம் ஒன்று விரித்த படி கிடந்தது. அதை அவசரமாக எடுத்துப் படித்த கந்தசாமி கடிதத்தைக் கோமதியிடம் நீட்டிய போது 'சிவகாமி...'! என்று அவள் அலறிய சத்தம் அந்த மாடி யையே உடைக்கக்கூடிய சக்தி பெற்றிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கா!

என்னை மன்னித்து விடு! உன் கணவராகிய என் அத்தான் நிரபராதி. நான் யாருக்கு உரிமையானவளோ அவருக்கு நான் குற்றவாளியல்ல என்பது புலப்படும். ஆயினும நான் தற்கொலை செய்யத் துணிந்துவிட்டேன். தற்கொலை செய்வது கோழைத்தனம் என்கிறீர்களா அக்கா...ஆம் அது கோழைத்தனம் என்பது எனக்கும் தெரியும். ஆனல்...ஆமாம்...ஆனல் கட்டிய கணவனை உயிருடன் பலி கொடுத்து விட்டு என் உணர்ச்சிகளை எல்லாம் அடக்கி வாய் பேச முடியாதவளாய் வாழ்வது இதைவிடக் கோழைத் தனம் என்பது என் எண்ணம்.

அக்கா, ஆகவே என்னை மன்னித்து இதுவரை எனக்குச் செய்த கடமைகளுடன் ஒன்ருகக் கருதி என் இறுதிச்சடங்கையும் முடித்து விடு.. அத்தான் மிகவும் நல்லவர். அப்படியான கணவரைப் பெற்ற நீ அதிர்ஷ்டசாலி...பாக்கியசாலியுங்கூட நீயாவது சந்தோஷமாக வாழ் அக்கா......!

சிவகாமி

தங்கச்சி... சிவகாமி... பைத்தியம் பிடித்தவள் போல் கத்திக் கொண்டு கீழே விழப்போன கோமதியை தாங்கிப் பிடித்த கந்தசாமியின் கண்களில் இருந்து இரண்டு சொட்டு நீர் வழிந்தோடியது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெரலின் ஷேட்

புத்தூர் கிராமப் பாடசாலையில் அன்று சமயவகுப்பு நடந்து கொண்டிருந்தது. ஆசிரியை உலகத்தில் நடை பெற்றுக் கொண்டிருக்கும் பொய், களவு, சூது, கொலை பற்றி விளக்கி அவற்றின் தீமைகளை எடுத்துக் கூறினுள். அடுத்தகிழமை தீபாவளி எதிர்நோக்கி வந்துகொண்டிருந் தது. ஆகவே இடையில் ஆசிரியை பல தீமைகளைச் செய்த நரகாசுரன் சக்தியால் அழிக்கப்பட்ட கதையை மிகவும் சுவாரஸ்யமாகக் கூறிக் கொண்டிருந்தாள்.

அதற்கிடையில் வகுப்பில் ஒருபேச்சுக்குரல், ''ஏண்டா உன் அப்பா உனக்குத் தீபாவளிக்கு உடுப்பு வாங்கிவிட் டாரா? இது முரலியின் பரிதாபக்குரல்.

''பின்ன... என்னப்பா கேள்வி இது அடுத்தகிழமை தீபா வளிஎன்ருல் இன்னும் உடுப்புகள் வாங்காமலா இருப்பான்? எங்கடப்பா இம்முறை டவுனுக்குப்போய் எனக்கும் தம்பிக் கும் நல்ல ''டெரலின் சேட்'' வாங்கி வந்திருக்கிருர்... உங்க சித்தப்பா உனக்கு வாங்கிவிட்டாரா...? இது முத் துவின் அநுதாபக்குரல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இல்லை முத்து, ஏதாவது கேட்டால் என்னை அடிக்க வாருர்! உனக்கென்னடா தீபாவளி உன்ர அப்பன் வைத்துப்போட்டே போயிருக்கிருன் தீபாவளி கொண்டாட ''என்று திட்டுகிருர் முகிலனுக்கு மட்டும் அரசன் னின்ரை சீலைக்கடையில் நல்ல காற்சட்டையும் ஷேட்டும் வாங்கி வந்து கொடுத்திருக்கிருர்'' என்று அலுக்கும் போது, ''யார் அங்கே பேசுகிறது?'' என்ற ஆசிரியையின் அதட்டல் கேட்டு இருவரும் திடுக்கிட்டு மௌனமாகின்றனர்.

''நரகாசுரன் அளவிறந்த துன்பங்களைச் செய்ததால் பராசக்தி அவனை அழித்து விடுகிருள்'' ஆசிரியையின் பாடம் முடிகிறது. திடீர் என முரளி எழுந்து ''டீச்சர்'' எனக் கூவியழைக்கின்ருன். ஆசிரியை அவனைக் கருத்துடன் பார்க்கிருள்.

''ஒரு சந்தேகம்... கேட்கலாமா......?''

முரளி எப்போதும் இப்படித்தான் ஏதாவது துருவித் துருவிக் கேட்டு ஆசிரியர்களுக்குத் தலையிடி கொடுப்பதில் அவனுக்குத் தனி விருப்பம். அதற்காக எந்த ஆசிரியரும் அவனிடம் கோபித்துக்கொள்வதில்லை. அவனது ஆராய்ச்சியும் துணிவும் அவர்களைக் கவர்ந்துவிடும். ஆகவே சமய ஆசிரியை நளினுவும் அவன் என்ன கேட்கப்போகிருன் என்பதை அறிவதற்காக ''கண்டிப்பாக கேள் முரளி'' என்ருள்.

''பஞ்சமா பாதகங்கள் எவை டீச்சர்......?''

''கொலை களவு...'' ஆசிரியை முடிக்கவில்லை, ''கொலை செய்வதுகூடப் பாவமா...?'' என்ருன் ஒரு பச்சைக் குழந்தைபோல.

''அதில் என்ன சந்தேகம்...? கொலைதான் மாபெரும் பாவம்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியென்ருல் கடவுள் கொலேசெய்யலாமா? டீச்சர்...?" ஆசிரியை நளினு நிஜமாகவே ஒரு கணம் அதிர்ச்சியடைந்து விடுகிருள். "கடவுள் கொலேசெய்தார் என்று உனக்கு யார் கூறினர்களப்பா...?"

"நரகாசுரனேக் கடவுள் சொன்ருர் என்கிறீர்களே . !"

நளினுவின் முகத்தில் புன்சிரிப்பு தவழ்கிறது. முரளியின் புரட்சிகரமான மூளேயை அவள் மெச்சுகிருள். அதே சமயம் குழந்தையின் உள்ளந்தெளிவு பெற நல்லதோர் விளக்கங் கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்தில் "கடவுள் செய்தது கொலேயாக முடியாது முரளி குற்றஞ் செய்தவர்களேத் தண்டிப்பது எப்படித் தவருகும்...?"

"அப்படியென்ருல் யாராவது குற்றஞ் செய்தால் அவர்களேத் தண்டிப்பதற்காகக் கொலேசெய்தால் அது குற்றமாகுமா டீச்சர்......?"

"ஏன் இல்லே... மனிதர்கள் செய்தால் அது கொலே தான். ஆகவே அது பெரிய குற்றமாகும். கடவுள் எமக்கெல்லாம் பெரியவன். அவனுக்கு மேலான சக்தி ஒன்று மேயில்லே. அதனுல் அவன் அழித்தற் தொழிலேச் செய்துதான் ஆகவேண்டும். மனிதர்களேப் பொறுத்தவரை சட்டம் என்ற ஒன்றுக்குப் பயப்பட்டுத்தான் ஆகவேண்டும். அந்தச்சட்டத்தின் மூலம் வேண்டுமானுல் குற்றவாளிகளுக்குத் தண்டனே வாங்கிக் கொடுக்கலாம்."

"நன்றி டீச்சர்."

முரளிக்கு அந்த விளக்கம் நன்ருகப் புரிந்துவிட்டது என்பது ஆசிரியைக்குத் தெளிவாக விளங்கியது. அல்லது முரளி கடைசிவரை நன்றிகூறவே மாட்டான்.

சாயந்தரம் மணிச்சத்தத்துடன் பாடசாலே முடிவடைகிறது. சிறிது தூரத்தில் மாணவர்கள் கூட்டம் கூட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக வீடு செல்கின்றனர். சிறிது தூரத்தில் முரளியும் முத்துவும் ஏதோ பேசிக்கொண்டே நடக்கின்றனர்.

"டேய் முத்து எங்க சமய டீச்சர் சட்டப்படி குற்ற வாளிகளுக்குத் தண்டனை வாங்கிக்கொடுக்கலாம் என் றுரே... இப்படியென்றுல் என்னடா...?" முரளியின் குர லில் ஆர்வம் இளையோடுகிறது.

"அப்படியென்றுல் யாராவது குற்றஞ்செய்தால் நாம் பொலீஸில் போய் றிப்போட் பண்ணவேண்டும். அவங்க குற்றவாளியைப் பிடித்து நீதி ஸ்தலத்தில் தண்டனை வாங்கித் தருவார்கள்......'

"முத்து தனக்குத் தெரிந்ததை விளக்குகிருன்.

"அடேயப்பா உனக்கு இந்தப் பெரிய விடயங்கள் எல்லாம் எப்படிடா தெரியும்...?"

"என்னடா அப்படிக் கேட்கிருய்...? நீ முதல்ல எங்க வீட்டுக்குச் சாராயம் விற்க வருவாயல்லா......?"

"ஆமாம்."

அப்போதெல்லாம் எங்கப்பா அந்தக் கள்ளச் சாரா யத்தைக் குடித்து விட்டுப் போடுகிற அட்டகாசத்தைப் பார்த்து அம்மாகூட பொலீஸில் றிப்போட் பண்ணப் போவதாக அப்பாவைத் திட்டுவா. எனக்குக்கூட உன் மீது கோபம் கோபமாக வரும்டா. நீ சாராயம் கொண்டு வரும்போது உன்னை அப்படியே பொலீஸிலே பிடித்துக் கொடுத்திடணும் என்றுகூட நினைப்பன். ஆனுல் ஒரு நாள் சித்தப்பாவின் கட்டளைப்படி நீ யாருக்கோ சாராயம் விற்க மறுத்தபோது அவர் உன்னை அடித்தாரல்லவா...? அதைப் பார்த்ததும் எனக்கு உன்மேல் பரிதாபமாக இருந்தது. அதனுல் அந்த யோசனையைக் கைவிட்டேன். இப்ப எங்கப்பா குடிக்கிறதில்லடா, எங்கப்பா இப்ப நல் லவராயிட்டார். ஏண்டா உங்க அப்பாவுக்கு இந்தத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்...? நம்ம ஊரில் எத்தனை பேர் உங்க அப்பாவைத் திட்டுறுங்க தெரியுமா...?

அதுக்கு நான் என்னடா செய்யட்டும்...? அதுதான் அவருக்கு இலேசான தொழிலாம். வீடுவீடாகக் கொண்டு போய்க் கொடுக்கத்தான் நான் இருக்கிறேனே. சரி வீடு வந்துட்டுது. நான் வாறேண்டா...'' கூறிக்கொண்டே முரளி தன் வீட்டை நோக்கி நடக்கின்றுன். அவன் சிறிய மனம் கொள்ள முடியாத பல சிந்தனைகள்.

அப்பா, அம்மா இருவரையுமே தன் அறியாப் பருவத்தில் பிரித்தெடுத்துக்கொண்ட ஆண்டவன் மீது அவன் ஆத்திரம் திரும்புகிறது. அந்த ஆத்திரத்தை வெளியிடுந் துணிவற்று மனஞ்சோர்ந்து வீடு திரும்பும்போது திருவாளர் சபேசன் அவன் வரவுக்காகக் காத்திருக்கிறுர். தன் சித்தப்பாவின் முதற்தர வாடிக்கைக்காரர்தான் அவர் என்பது முரளி அறிந்த விடயந்தான்.

''முரளி'' அவர் அழைக்கிறுர்.

என்ன என்று கேட்பதுபோல முரளி அவரை நிமிர்ந்து பார்க்கிறுன். ''தீபாவளிக்கு எனக்கு ஐந்து போத்தல் வேண்டும் என்று சித்தப்பாட்டச் சொல். அத்தோட இப்ப ஒரு அரை வாங்கிவா.''

முரளி கேட்டும் கேட்காதவன் போல நடக்கிறுன். 'டேய் நீ எங்கப்பாவுக்குச் சாராயம் கொண்டுவந்து கொடுக்கும்போது எனக்கு எவ்வளவு கோபம் உண்டாகுந் தெரியுமா...?'' முத்துவின் வார்த்தைகள் அவன் உள்ளத்திற் சுழல்கின்றன.

''சீ! சாராயம் விற்றுப் பிழைப்பது ஒரு பிழைப்பா? இனி இந்தச் சிற்றப்பா என்னைக் கொன்றுலும் நான் சாராயம் விற்கப்போகமாட்டேன். அது கேவலமான தொழில்! கள்ளத்தொழில்!! ஆமாம்! பத்திரமாகச் சீலைக்குள் சுற்றி ஆயிரம்முறை கவனஞ் சொல்லி அனுப்புகிறுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் வெளிவெளியாகக் கொண்டுபோனல் என்னவாம்! சபேசனுகட்டும் குபேசனுகட்டும் இனிமேல் நான் சாராயப்போத்தல்ல கைவைக்கமாட்டேன்.

மனப்போராட்டத்தோடு வீட்டை அடைகிருன் முரளி.

"வந்திட்டியாடா...? சீக்கிரமாகச் சாப்பிட்டுப் போட்டு கந்தையாண்ணை வீட்டுக்கு இந்தச் சாமானைக் கொண்டு போய்க் கொடுத்துப்போட்டு வா" சித்தப்பா சிங்காரம் ஒரு போத்தலை அவனிடம் காட்டி மூலையில் வைத்துவிட்டுப் போகிருன்.

"ஊஹூம்! எனக்கு முடியாது சித்தப்பா என்று கூறிவிட அவன் உதடுகள் துடிக்கின்றன. ஆயினும் துணிவில்லை, சித்தப்பா கொன்றுபோடுவார் என்ற அச்சம் அவனைத் தடைசெய்கிறது. அவன் மௌனமாகச் சாப்பிட்டுவிட்டு எழுகிருன் அப்போது அவன் சித்தப்பா பிள்ளை முகிலன் கையில் ஒரு அழகான கலர் பெட்டியை வைத்துத் தண்ணீருடன் குழப்பி விளையாடுகிருன். சிங்காரம் வெளியே சென்று விட்டதால் முரளிக்குச் சிறிது துணிவு பிறக்கிறது முகிலனின் கையில் இருக்கும் கலர்பெட்டியை முரளி பறித்துக்கொள்ள முகிலன் வாய்விட்டுக் கதறுகிருன்.

"ஏண்டா ராஜா என்னடா நடந்தது...? ஏன் அழுகிருய்...?" முகிலனின் தாய்கேட்டுக்கொண்டே அங்குவருகிருள்.

"அண்ணுபெட்..." குழந்தை முரளியைப் பார்த்து விளக்கங் கொடுக்க அவள் பார்வை முரளியின் பக்கந் திரும்புகிறது! கையில் கலர்ப்பெட்டியுடன் நிற்கும் அவனைப் பார்க்க அவளுக்கு ஆத்திரமாக இருக்கிறது.

"ஏதுக்கடா குழந்தையின் கையில் இருந்த பெட்டியைப் பிடுங்கிக் கொண்டாய் உனக்கு அவனுடை சொரட்டுப் பிடிக் காட்டி இருக்கேலாது. அவனை அழவைத்து வேடிக்கை பார்க்கிருயாடா...? இங்கே தாடா" முரளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் கையில் இருந்த பெட்டியைப் பறித்துக் குழந்தை யிடம் கொடுத்துவிட்டுப் போகத் திரும்புகிருள்.

''அவனுக்குமட்டும் விளையாடக் கலர்ப்பெட்டி, படிக்கிற எனக்கு ஒன்றுமே இல்லை. நேற்றுக்கூட மாஸ்டர் அடித்தவர்.'' முரளியின் குரல் மெதுவாகக் கேட்கிறது.

''நீ இப்ப பெரிய ஆள்! உன்ர அப்பா இங்கே நிறைத்து விட்டுப் போயிருக்கிருன் உனக்கு நினைத்ததெல்லாம் வாங்கித்தர. பேச்சைப் பார் பேச்சை! பாவம் அனுதை என்டு அண்ட வைத்தால் இன்னும் பேசுவாயடா... உம் போடா போய் உன் சித்தப்பா கூறிய சாமானைக் கொடுத்து வா!'' அதிகாரத்தோடு கட்டளையிடுந் தன் சிறிய தாயாரைப் பார்க்கிருன் முரளி.

சிங்காரம் வீட்டில் இல்லை என்ற துணிவில் மிகவும் சரளமாகப் பிறக்கின்றன வார்த்தைகள். ''எனக்கேலாது இனி நான் சாராயம் விற்கப் போகமாட்டன். அது மிகவும் இழிவான தொழில், கள்ளந்தொழில் - என்னுல் முடியவே முடியாது!''

''என்னடா... என்னடா முடியாது...?'' வீட்டுக்குள் நுழைந்துகொண்டிருந்த சிங்காரம் அதட்டியபோது முரளியின் கண்கள் அச்சத்தால் கலங்குகின்றன.

''அவன் இனிச் சாராயம் விற்க மாட்டாணும்! அது இழிவான தொழிலாம்! அவனுக்கு இப்ப கலர்ப்பெட்டி வேண்டுமாம்''! அவன் சின்னம்மா அவனுக்குப் பதிலாகப் பேசினுள்.

''டேய்...'' சிங்காரத்தின் குரல் சிங்கத்தின் கர்ஜனை போல் தொனிக்க முரளி நடுங்கி விடுகிருன்.

சித்தப்பாவின் முன் அவனுல் எதுவும் பேச முடியவில்லை. அவன் குரல் அடைத்து விடுகிறது. அவ்வளவு பயம் அவனுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"போறன் சித்தப்பா...... எனக்கு... எனக்கு......தீபா வளிக்கு ஒரு டெரலின் ஷேட்..." அவன் குரல் நடுங்கிக் கொள்கிறது.

"ஹ... ஹ... ஹா...!" சிங்காரம் அகங்காரத்துடன் சிரித்துவிட்டு "டெரிலின் ஷேட்டா வேண்டும்! பாவம் என்று ஒரு பிடிசோறு கொடுத்தால் டெரலின் ஷேட்" கேட்கும் அளவுக்கு உன் துணிவு வந்துவிட்டது. உனக்கு ஒரு பருத்திச்சட்டைகூடக் கிடையாது. நான் சொன்னதைப் போய்ச் செய்!"

"அப்பா எனக்கும் டெரலின்!" மழலையில் கேட்டுக் கொண்டே வந்த முகிலனை அப்படியே அணைத்து, "என்ர ராஜா, உனக்கில்லாத சட்டையாடா...? அம்மாட்டப் போய்க் கேள். உனக்கு அழகான ஒரு டெரலின் ஷேட் வாங்கிக் கொடுத்திருக்கிறேன்" என்று கூறிக் கொஞ்சிக் கொள்கிறான் சிங்காரம்.

அந்தக் காட்சி முரளியின் கண்களைப் பனிக்க வைக்கின்றன. சிங்காரம் பழந் துணியில் சுற்றிக் கொடுத்த போத்தலை எடுத்துக்கொண்டு இதயம் நிறைந்த சோகத்துடன் நடக்கிறான் முரளி.

போத்தல் அவனுக்கு என்றுமில்லாத சுமையாகத் தோற்றுகிறது. ஒரு பாவத் தொழிலைச் செய்கிறோமே என்ற வேதனை அவனை வாட்டுகிறது. போத்தலைப்போட்டு உடைத்துவிட்டு தவறி விழுந்துவிட்டது என்று கூறிவிடுவோமா... என்றெல்லாம் சிந்தித்துக்கொண்டே நடக்கிறான். அப்போது அவன் எதிரில் வருகிறான் மூத்து.

"டேய் முரளி!" எங்கடா பயணம்...? ஓ கையில் போத்தலா...? யாருக்கடா...? எங்க அப்பாவுக்குமட்டும் கொடுத்துப் போடாதடா...?" முத்துவின் வார்த்தைகள் முரளியை உலுப்பி விடுகின்றன. அவன் கண்கள் பனிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏண்டா அழுகிறாய்...?'' முத்துத்தான் வினவுகிறான்.

''ஏன் அப்பா அம்மாவை நினைச்சன். அழுகை வந்திடிச்சு... இந்தத் தொழிலை எனக்குச் செய்யவே பிடிக்கல்ல முத்து. ஆனால் சித்தப்பா விடமாட்டாரே இனித் தீபாவளி முடியும் வரைக்கும் எனக்கு ஓய்வு இருக்காதடா. டேய் இந்த மனிதர்கள் இதை ஏண்டா வாங்கிக் குடிக்கிறார்கள்...?

''...ம் அதுவும் ஒரு நல்ல கேள்விதான் முரளி, ஆனால் பதில்தான் எனக்குத் தெரியவில்லை. படு கச்சலடா. அதுக்குப்போய் பணத்தை எல்லாம் அநியாயமாகச் செலவழிக்கிறாங்க!''

''டேய் முத்து நீ என்னடா சொல்லுகிறாய்...? கச்சலடா... அது உனக்கு எப்படியடா தெரியும். நீ குடிச்சிப் பார்த்தியா?''

''சீ எனக்கு விசராடா அதைக் குடிக்க! எங்கப்பா குடிக்கிறபோது நான் விரலாலே தொட்டு நாக்கில் வைத்துப் பார்த்தண்டா... அம்மா பச்சைக் கச்சல்!''

''நீயாவது நாக்கில் வைச்சுப்பாாத்தாய். எனக்கு அந்த மணமே பிடிக்காதாடா. அது சரி இப்ப நான் என்ன செய்யட்டும் முத்து...? சித்தப்பா இந்தப் போத்தலைக் கந்தையா அண்ணன் வீட்டில் கொடுக்கட்டாம். எனக்கு முடியாதெண்டன். ''டேய்'' என்று அது போட்ட சத்தத்தில் தூக்கி வந்திட்டன்டா. முத்து உன்ர டெரலின் ஷேட் என்ன நிறமடா...?'' கண்களில் ஆசை பொங்க அவன் கேட்கிறான்.

''பட்டர் கலர்டா... ஆமாம்! இப்ப இந்த போத்தலை என்னடா செய்யப் போகிறாய், பேசாமக் கொண்டு போய் கந்தையா ண்ணன் கையில் கொடுத்திட்டுப் போ. அல்லது வீண ச் சித்தப்பாட்ட அடிபடுவாய்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்து கூறிடதும் ஓரளவுக்குச் சரியாகப்படவே முரளி மறு வார்த்தையின்றிக் குறிப்பிட்ட இடத்திற் சென்று கொடுத்துவிட்டுத் திரும்பினன். ''ஏண்டா சபேச மாமா உன்னட்ட ஒன்றுஞ் சொல்லல்லையா?'' வீட்டுக்குள் நுழைந் தவனிடம் சிங்காரம் வினவியபோது அவன் உடல் நடுங் கியது. அதனல் அவன் நடுங்கிக்கொண்டே, ''ஆமாம் சொல்லிச்சு சித்தப்பா... தீபாவளிக்கு ஐந்து வேண்டுமாம்! நான்தான் உங்களிடம் சொல்ல மறந்திட்டன்'' என்று சொன்னபோது சிறுவனக இருந்தாலும் அவன் தன் செய் கைக்காக வெட்கப்பட்டான்.

காலையில் கற்றுக் கொடுத்த ஆசிரியையின் போதனை அவன் கண்முன் நின்றது. பொய், களவு, கொலை, சூது, மது எல்லாம் பாவமான செயல்கள். ஆயின் அவன் கூடத் தான் பாவஞ் செய்துவிட்டான். அதைச் செய்யாவிட் டால் அவனல் தப்பிக் கொள்ள முடியாது. கடவுளே என்னை மன்னிச்சிடு என்று பிரார்த்தித்தது அவன் பிஞ்சு உள்ளம்.

''நாகாசுரனைக் கடவுள் அழித்தார். அவன் செய்த அட்டூழியங்களைப் பொறுக்க முடியாது என்று தேவர்கள் மூறையிட்டதால் அவன் அழிக்கப்பட்டான். அப்படியா ஞல் சித்தப்பா கூடத்தான் மனித குலத்திற்குக்கொடுமை செய்கிருர். அவரை நானே அழித்துவிட்டால்...? சாப்பாட் டில் ஏதாவது நஞ்சைக் கலந்து விட்டால் முடிந்தது... ஆனல் டீச்சர்தான் கொலை செய்வது பாவம் என்று கூறி ஞரே, யாராவது குற்றஞ் செய்வது தெரிந்தால் நீதிஸ் தலம் மூலந் தண்டிப்பதுதான் சட்டம் என்றுன் முத்து. எங்கள் கிராமத்தில்தான் பொலீஸ் ஸ்ரேசன் இல்லையே. இரண்டு மைல் நடக்கவேணும். அதெல்லாம் நமக்கு முடி யாது.

''கொலை செய்வது பாவம் எண்டாக்கூடப் பாதக மில்லை. ஆனல் முகிலன் பாவமே! பிறகு அவனும் என்னைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலக் கஷ்டப்படணும். அவன் குழந்தையாச்சே ர்சா... எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.'' முரளிக்கு வாய்விட்டு அழவேண்டும்போல இருந்தது. ஆனால் அழுவதற்குக் கூட அவனுக்குச் சுதந்திரம் இல்லை யாச்சே அதனால் அவன் சிங்காரத்தின் கட்டளைப்படி போத்தலைத் தூக்கிக்கொண்டு நடக்கிறான்.

நாட்களும் நகர்ந்துகொண்டே இருந்தன. தீபாவளி யும் நெருங்கிக்கொண்டு வந்தது. அக்கம் பக்கமெல்லாம் தீபாவளியை வரவேற்பதுபோற் பட்டாசுகள் வெடித்தன. பார்க்கும் இடமெல்லாம் தீபாவளி அமர்க்களம். முரளிக் குமட்டும் எதுவுமே பிடிக்கவில்லை. டெரலின் ஷேட் இல் லாமலும் ஒரு தீபாவளியா...? முத்துவும் மற்ற நண்பர் களும் டெரலின் ஷேட் போட்டுக்கொண்டு தீபாவளி கொண்டாடும்போது அவன்மட்டும் அவர்கள் மத்தியில் எப்படிப் போவது...? அவர்கள் எல்லோரும் அவனைக் கேலி செய்தால்...?

டெரலின் ஷேட் வேண்டும் என அவன் வேறு யாரி டம் கேட்க முடியும்...? சபேசன் வீட்டுக்குப் போய்வரும் வழியில் அவன் புடவைக்கடை ஒன்றுக்குள் நுழைந்து கொண்டான். அவனுக்குப் பிடித்தமான ஷேட் பதினெட்டு ரூபாவாம். இவ்வளவு பெரியதொகை கொடுத்து அவன் சித்தப்பா டெரலின் ஷேட் வாங்கவே மாட்டார்.

இரண்டு சாராயப்போத்தலைக் களவெடுத்து விற்றால் நல்ல ஷேட் ஒன்று வாங்க முடியும். ஆனால் அது பாவ மாச்சே! அப்போ புண்ணியந் தேடின நிம்மதியாக வாழ முடியாது போலிருக்கே. சாராயம் விற்று ஒரு ஷேட் போட வேண்டுமா? அவனுக்கு என்ன செய்வதென்றே தெரிய வில்லை.

அடுத்த நாள் விடிந்தாற் தீபாவளி. அன்று காலை யில் அவனைப் பாடசாலைக்குப் போகக்கூடாது என்று கட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டனேயிட்டான் சிங்காரம். காரணம் வாடிக்கைக்கார ஞக்கு அவன் போத்தல் கொண்டுபோக வேண்டும். சபேசன் வீட்டுக்கே இரண்டுமுறை போய்விட்டான் இன்னுமொருமுறையோடு சரி. ஆனல் அடுத்து இன்னும் எத்தனே வீட்டுக்குப் போகவேண்டுமோ...? அவன் கால்கள் வலித்தன. அதனுல் வழியில் இருந்த ஒரு மர நிழலில் அவன் போத்தலுடன் அமர்ந்து கொண்டான்.

இரண்டு மூன்று நிமிட நேரத்தில் இரண்டு பொலீசார் அவ்வழியே சைக்கிளிற் போய்க்கொண்டிருந்தனர். இப்படி இருந்துவிட்டு எப்போதாவது அபூர்வமாகப் பொலிஸார் போவது அந்தக் கிராமத்தில் வழக்கம். அவர்களைக் கண்டதும் முரளிக்கு ஒரேயொரு சிந்தனைதான் தட்டியது அவன் திடும் எனத் தன் கைகளைக் காட்டி அவர்களை நிறுத்தினுன், அவர்களும் நின்றனர்.

அவன் சீலேக்குள்ளே பத்திரமாக வைத்திருந்த போத்தலே எடுத்துக்காட்டித் தன் சித்தப்பாவின் கொடுமையைப் பொறுக்க முடியாததாற்தான் இப்படிச் சாராயம் விற்க வேண்டிய நிலே ஏற்பட்டது என்று கூறித் தன் சித்தப்பா பற்றிய விபரங்களை எல்லாம் கொடுத்து அவரைக் கைது செய்யும்படி பணித்துத் தன்னை மட்டும் காட்டிக் கொடுக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டான்.

சிறுவனின் நேர்மைக்காகவும் துணிச்சலுக்காகவும் அவனைக் காட்டிக்கொடுப்பதில்லே என்ற தீர்மானத்தோடு அவனே விட்டுச் சிங்காரத்தின் வீட்டை நோக்கி நடந்தனர் பொலிஸார்.

முரளி வீடு திரும்பியபோது வீட்டில் பெரிய அமர்க்களமாக இருந்தது. அவன் ஒன்றும் அறியாதவன் போல் ஒரு மூலேயில் சென்று பதுங்கிக்கொண்டான். வீட்டுச் சாமான்கள் எல்லாம் பொலிஸாரால் சோதனையிடப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது முரளி என்று ஒலித்த பரிதாபக் குரலைக் கேட்டு அவன் திடுக்கிட்டான்.

சிங்காரத்தின் மனைவி அவனது சின்னம்மா இரண்டு பத்து ரூபா நோட்டுகளை அவனிடம் நீட்டி "இந்தாடா நீ விரும்பிய ஷேட்டை வாங்கிக் கொள். பொலீஸார் உன்னிடம் ஏதாவது கேட்டால் சித்தப்பாவுக்கு எதிராக எதுவும் சொல்லாதே" கண்களில் நீர் திரையிட்டு நின்றது.

முரளிக்கு அவர்களைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது. ஆனால் அவனுக்கு வேண்டியிருந்தது ஒரு டெரலின் ஷேட். அதனால் வேறு சிந்தனைக்கு இடமின்றித் துள்ளிக் கொண்டு கடைப்பக்கம் ஓடினான் அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயந்தியின் தந்தி

மணமாகி ஐந்தாண்டுகளுக்குப் பின் பிறந்த என் அருமை மகளுக்கு அன்று பெயர் சூட்டும் வைபவம் மிகவும் ஆடம்பரமாக நடந்துகொண்டிருந்தது. பெரிய வர்கள், பெண்கள், குழந்தைகள் இப்படியாக மக்கள் வருவதும் போவதுமாக இருந்தார்கள். அவர்களை வர வேற்று உபசரிக்கும் பொறுப்பை ஏற்றிருந்த நான் இடது பக்கத்தில் இருந்த சாளரத்தின் வழியாகத் தொட்டிலில் கிடந்த என் குழந்தையைப் பெருமிதத்துடன் பார்த்தேன். கள்ளம் இல்லாத அந்த ஜீவனின் பரிசுத்தம் கண்களில் பிரதிபலித்தது. தனது பொக்குவாயைத் திறந்து என்னைப் பார்த்து ஏதோ புரியாத பாஷையில் 'களுக்' என்று சிரித்தாள். அந்தச் சிரிப்பில் இந்த உலகத்தையே மறந் திருந்த என்னை 'சார் தந்தி' என்ற குரல் தடுமாற வைத் தது. மங்களகரமான வைபவத்தில் ஏதாவது வாழ்த் துச் செய்தியாக இருக்குமென்ற எண்ணத்துடன் தந்தி யைப் பிரித்துப் படித்தேன். ஒரு முறையல்ல பன் முறை படித்தேன். என் தலை சுழன்றது. அடி நெஞ்சின் ஆழத்தில் புதைத்திருந்த என் மனச் சாட்சி விஸ்வரூப மெடுத்து என்னைக் குத்திக் கொன்றது. என் உள்ளத் தின் வேதனை வியர்வைத் துளிகளாக உடலெங்கும் அரும் பிற்று. அவற்றிற்கு மட்டும் பேசும் சக்தியை இறைவன் படைத்திருந்தால்......? நல்லகாலம் தெரிந்துதான் நன்றி கெட்ட மனிதனுக்கு மட்டும் இறைவன் பேசும் சக்தி யைப் படைத்திருந்தான்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் கண்கள் மீண்டும் அந்தத் தந்தியில் உள்ள வச னத்தைப் படித்தன.

''தங்கள் குலவிளக்கு அணையா
ஜோதியாய் பலகாலம் இருந்து
சுடர்விட்டுப் பிரகாசிக்க இந்த
ஏழையின் ஆசிகள்
அன்புள்ள
ஜெயந்தி''

அக்காள்! என் அன்பு அக்காள்!! என் இதயத்தின் அணையாத ஜோதி! 'அக்காள்' என்ற பதத்திற்கே அர்த் தந் தெரியாத முட்டாள் நான். அப்படியே அவள் காலில் விழுந்து மன்னிப்புக் கோரவேண்டும் என்று மனம் துடியாய்த் துடித்தது. ஆனால் அந்தப் புனித ஜீவனை அக்காள் என்றழைக்க எனக்கு என்ன உரிமையுண்டு...? அதை நினைத்தால்......!

ஆம்! அப்போது எனக்கு வயது இருபத்திரண்டு. கொழும்புப் பட்டணத்திலே வேலையாகி இரண்டாண்டு இடைவெளியின் பின் என் சொந்த ஊராகிய முல்லைத் தீவுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். புகையிரதத்தில் ஏறப்போகும் சமயம் என்னைத் தடுத்து நிறுத்தியது என் நண்பன் தியாகராஜனின் குரல். அவன் தன் கையில் ஆயத்தமாக வைத்திருந்த பொட்டலத்தை என் கையில் திணித்து ''பாலு இதை எப்படியாவது என் தங்கையிடம் சேர்ப்பித்து, வரும்போது அவளுடைய சுகத்தையும் விசா ரித்துவா'' என்று இட்ட அன்புக் கட்டளையைச் சிரமேற் கொண்டு முல்லைத்தீவுக்குச் சென்றதும், முதல் வேலையாக நண்பன் தியாகராஜனின் இல்லத்தை அடைந்தேன்.

என் நண்பன் என்னைவிட ஐந்தாண்டுகள் பெரியவன். அழகன் என்று வர்ணிக்க முடியாவிட்டாலும் 'குரூபி' என்று சொல்லமுடியாது. குணத்தில் பத்தரைமாற்றுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கம். அண்ணுவின் சாயலில்தான் தங்கையும் இருப்பாள் என்ற துணிவில் அடி எடுத்து வைத்த நான் ஒரு கணம் அசந்தே போய்விட்டேன். அங்கே நான் கண்டது......?

அவனது தங்கைதானு அவள்? ஒருவேளை வேறு யாராகவாவது இருந்தால் என்ற ஐயத்தில், ''தியாகராஜனின் வீடு இதுதானு?'' என்று தட்டுத் தடுமாறிக் கேட்டுவைத்தேன். ''ஆமாம்!'' என்று சிறிதும் பதட்டமில்லாமல் கூவியது குயில்! அத்தனை இனிமையான சாரீரம். ''அவரது தங்கை......'' நான் முடிக்க வில்லை, ''நான்தான்! ஏன்......?'' மீண்டும் உள்ளவீணை மீட்டப்பட்டது. எனக்கு சொற்கள் தொண்டைக்குள்ளே அடைபட்டன. கண்கள் சுற்றுப்புறத்தை மறந்து அவளையே உற்று நோக்கின. ''ஏன் ஒரு மாதிரியாகப் பார்க்கிறீர்கள்? ஏதாவது கேட்கவேண்டுமா......?'' என் மன நிலையை ஊகித்துக் கொண்டாள். ''வந்து... இதை உங்கள் அண்ணு கொடுக்கும்படி கூறினுர். அத்தோடு உங்கள் சுகத்தையும் விசாரித்து வரவேண்டும் என்றுர்.'' எப்படியோ மூச்சுப்பிடித்துக் கூறிவிட்டேன். ஏதோ பெரிய காரியத்தை செய்து முடித்த திருப்தி.

''ஓ...! அண்ணு அனுப்பினுரா...? இதையேன் முன் கூட்டியே சொல்லவில்லை, உள்ளே வந்து உட்காருங்கள்!'' பிறகு உபசரிப்புக்குக் கேட்கவா வேண்டும்...? சிற்றுண்டி, தேநீர், செவிக்கினிய பேச்சு இப்படி இன்பமாகக் கழிந்தது பொழுது.

அந்த விடுதலை நாட்களை அங்கு தங்கிய அத்தனை நாட்களும் அநேகமாக அவள் வீட்டிலே கழித்தேன். சில வேளைகளில் பெரிய மனுஷிபோல வந்து என் எதிரில் உட்கார்ந்து பேசுவாள். பேச்செல்லாம் புத்திமதியாகவே இருக்கும். சில சமயங்களில் ஏதாவது புத்தகக்கட்டை என் முன்னுல் கொண்டுவந்து போட்டு தனக்கு அடுக்கவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் வேலை இருப்பதாகக் கூறி ஓடிவிடுவாள். இப்படி நேரந் தவறிப்போன வேளைகளில் மறைமுகமாக அதை உணர்த் தவும் அவள் தவறியதில்லை. ஒருநாள் விளையாட்டாக ''உங்கள் பெயர்......'' என்று என்னையும் அறியாமல் வினவிவிட்டேன்.

''ஜெயந்தி! மென்மையாக வந்தது பதில். ''அழகான பெயர்'' என்று அவளை அர்த்தபுஷ்டியுடன் பார்த்தேன். பேச்சை வேறு முனையில் திருப்பி என் மனதையும் வேறு வழியிற் திருப்பி விட்டாள் அவள்.

இப்படிக் கழிந்த நாட்கள் அநேகம். ஆனால் என் அன்பு மட்டும் குறைவதாக இல்லை. வளர்பிறைபோல் வளர்ந்தது. இல்லாததெல்லாங் கற்பனைபண்ணி அதில் இன்பங்காண மனந்துடித்தது. அவளின் மனதை மட்டும் என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. அவள் அன் பாகப் பேசினாள். ஆசையோடு வரவேற்றாள். அன்பாக உபசரித்தாள் ஆனால் அதை எப்படிக் 'காதல்' என்று அர்த்தஞ் செய்ய முடியும்......?

விடுதலை நாட்களும் முடிவடையுந் தறுவாயில் இருந் தன. என் உள்ளக்கிடக்கையை அவளிடம் எடுத்துக் கூறாமல் ஓரடிகூட என்னால் எடுத்துவைக்க முடியாது. காதல் கூடத் தெரியப்படுதி அறிந்துகொள்ள வேண்டிய விடயமா—? என் அடிமனம் என்னிடம் பல வினாக்களைத் தொடுத்தது. ஒருவேளை தெரிந்தும் தெரியாததுபோல நடிக்கிறாளோ?— அப்பா! பெண்களே பொல்லாதவர்கள். மென்மையான இதயம் உள்ளவர்களே என்று கூறுவது அத் தனையும் பொய். ஜெயந்தியின் இதயம் என்ன கல்லா? அவளைவிடக் கொழும்புப் பட்டணத்தில் எத்தனை அழகி கள் என்னை வலிய வந்து எடுக்க வருவார்கள். சீ! ஏன் இந்தக் குரங்கு மனம் இப்படி அடம்பிடிக்கிறது. ''சொல்லு! சொல்லு!!'' என்று என்னைச் சித்திரவதை செய்கிறதே! —எப்படியோ அவளிடம் என் ஆசையைத் தெரிவித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டேன்: அவள் என் பேச்சைக் கேட்டதும் திடுக்கிடு வாள் என்று எதிர்பார்த்தேன். அவளுடைய முகத்தில் எதுவித சலனமும் ஏற்படவில்லை. இதற்கிடையில் மட்டும் மெல்லிய கீற்றுப் புன்னகை மலர்வது சாடை யாகத் தெரிந்தது. இத்தனைக்கும் அவள் என்னெதிரில் இருந்தபடியே எதிர்ப்புறமிருந்த சாளரத்தை உற்று நோக் கிக் கொண்டிருந்தாள். எனக்கு உடம்பெல்லாம் வியர்த் துக் கொட்டியது. ஏதோ கேட்கக்கூடாததைக் கேட்டு விட்டதுபோன்ற பயம் உள்ளத்தைக் குத்திக் குத்திக் கொன்றது. இருதயம் 'நின்றுவிடுவேன்' என்று பயங் காட்டியது. 'டக்டக்' என்று விஞடிக்கு ஆயிரம் முறை அடித்த இருதயத்தை இடது கையால் அமுக்கிப் பிடித்துக் கொண்டேன். இரண்டு நிமிட மௌனத்தால் என்னைக் கொல்லாமல் கொன்றுவிட்டுத் தன் பொன்னுன வாயைத் திறந்தாள் அவள். என் உடல் மீண்டும் நடுங்க ஆரம்பித் தது. சொல்லுமுன் இருந்த துணிவு அதைச் சொன்ன பின்பு எங்கே ஓடி ஒழிந்து கொண்டதோ......?

''எனக்கு உங்கள் பேச்சைக் கேட்டதும் வாய்விட் டுச் சிரிக்க வேண்டும்போல இருந்தது. ஆனல், உங்க ளுக்காக அநுதாபப்படுகிறேன். உங்களைப்போல பலர் என்னிடம் தங்கள் அன்பை வலிய ஏற்றுக்கொள்ளும்படி வாய்விட்டுக் கேட்டிருக்கிருர்கள். அவர்களுக்கெல்லாம் நான் இதே பதிலைத்தான் கூறியிருக்கிறேன். மேலும், காதல் என்பது கண்டவுடன் ஏற்படும் சரக்கல்ல. பரஸ் பரம் இருவர் பல நாள் பழகியபின் ஏற்படுவதுதான் உண்மைக் காதல் என்கிறது என் அகராதி. வயதில்கூட நான் உங்களைவிட ஒன்று இரண்டு பெரியவளாக இருப் பேனுக்கும்!''

அவள் முடிக்கவில்லை ''அதைப் பற்றிய அக்கறையே எனக்கில்லை. உண்மையான அன்பிற்கு இவையெல்லாம் தடைகளல்ல'', ஏதோ காதலில் அதிகம் அநுபவப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன் போல் ஒரு குட்டிப் பிரசங்கமே செய்துவிட்டேன் நான். அவளோ என்றால் விடவில்லை. முதலில் இப்படித் தான் கூறுவீர்கள். பிறகு திருமணம் என்ற கட்டத்தில் வந்து நிற்கும்போது ஓடிவிழிப்பீர்கள். என்னைப் பொறுத் தவரையில் திருமணமாகும் பெண் ஆணைவிடக் குறைந்தது ஓராண்டாவது வயதிற் குறைந்தவளாக இருக்கவேண்டும். உங்கள்மேல் வைத்திருக்கும் சகோதர பாசத்தை வீணு கக் களங்கமடையச் செய்து விடாதீர்கள்'' அவள் மிக வும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். ஆனால், இளம் இரத்தம்! நான் ஒரு சிறிதும் விட்டுக் கொடுக்கவில்லை அப்பொழுதே அவள் கழுத்தில் தாலி கட்டிவிடுவதாக வாக்களித்தேன். ஒருவேளை அன்றே அப்படிச் செய்திருந் தால் இருந்திருக்கலாம். என் வார்த்தையை நம்பினாள் அவள் எங்கள் காதல் எதுவித தடையுமின்றி வளர்ந் தது. இந்நிலையில் நானும் உண்மையைக் கூறவேண்டும். அப்போது அவளை நான் மனமார நேசித்தேன். அவளை ஏமாற்ற வேண்டும் என்று கிஞ்சித்தும் எண்ணியதுமில்லை. கற்பனையில் அவளை என் மனைவியாகக் கருதினேன்.

ஒருநாள் சாயந்திரம் வழக்கம்போல அவளைப் பார்க் கச் சென்றேன். அன்று என்றுமில்லாத கொள்ளையழ குடன் காட்சிதந்தாள் ஜெயந்தி. சாறி எடுப்பாக இருந் தது. ஜடையை நீட்டாகப் பின்னி தோட்புறமாக வளைத்து முன்னே தொங்கவிட்டிருந்தாள். கதிரையின் ஒரு பக்கச் சட்டத்தில் இருந்து என்னை விழுங்கிவிடுவது போல இமை காட்டாமல் பார்த்தாள். கண்கள் என் னென்னமோ பேசின. அவள் அருகிற் சென்று நானும் அவளை உற்று நோக்கினேன். என் கண்கள் அவள் அழ கைப் பருகின. அவளும் நோக்கினாள்; ஆனால், ஒரே ஒரு கணந்தான். அடுத்த விநாடி அவள் கண்கள் தரையில் குத்திட்டன கால்கள் தரையுடன் சல்லாபித்தன. குங் குமத்தை அள்ளிப் பூசினாற்போல அவள் முகம் 'குப்' என்று சிவந்தது. நான் என்னை மறந்தேன் சூழ்நிலையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறந்தேன். அவள் கரங்கள் இரண்டையும் இறுகப் பற்றி 'ஜெயந்தி' என்றேன். அந்த ஸபரிசம்! ஆஹா! அது என்ன பஞ்சுமெத்தையா......? அதை அநுபவிக்கவிட வில்லை. இளங்கன்றைப்போல் ஒரு துள்ளுத் துள்ளி விலகி நின்ருள். பார்வை மட்டும் என்னை நோக்கி இருந்தது. ஒருவித சலனமுமில்லை. அதே புன்முறுவல்.

''ஜெயந்தி! ஏன் இப்படிப் பயந்து சாகிருய்? எங்கே உன் கரத்தை இப்படி கொடு. ஒரு முறை, ஒரேயொரு முறை அதை முத்தமிட அநுமதி ஜெயந்தி...'' வெட்கத் தைத் துறந்து கேட்டுவிட்டேன்.

''வேண்டாம் பாலு! ஆயிரம் இருந்தாலும் நான் பெண். ஊருக்கும் உலகத்துக்கும் நான் எப்படிப் பயந்து சாகிறேன்? என்று தெரியுமா...? இந்த நிலையில் யாராவது இங்கு வந்தால் நம்மைப் பற்றித் தவருகப் பேசமாட் டார்களா? இவ்வளவு நாளும் பொறுத்தீர்கள். இன் னும் சில நாட்கள் பொறுத்திருங்கள். ஆக்கப் பொறுத் தவர் ஆறப்பொறுக்க வேண்டாமா...?''

''ஜெயந்தி! என்ருே ஒரு நாள் உன்னை மணந்து கொள்ளத்தானே போகிறேன். அப்போது நீ என் மனைவி யாகத்தானே போகிருய். கல்யாணம் என்று ஒன்று நடந்தாற்ருன் கணவன் மனைவி என்பது உன் எண்ணமா?''

''பாலு ! கல்யாணம் என்ற சொல்லுக்கு அது எந்த விதக் கல்யாணமாக இருந்தாலும் உரிய மதிப்பைக் கொடுக்க ஆசைப்படுகிறேன் நான். நாளைக்கு நாம் திருமணமாகிய பின்பு, உங்கள் மனைவி உங்களிடமே இத் தனை கண்டிப்பாக இருந்தாள் என்று நீங்கள் பெருமைப் பட மாட்டீர்களா......?

அதற்கு மேலும் நான் அவளை வற்புறுத்தவில்லை. நல்லவேளை அன்றுமட்டும் அவள் சிறிது விட்டுக்கொடுத் திருந்தால்—இரண்டு நிமிட உணர்ச்சிக்குப் பலியாகி இன்று அவள் என்ன நிலையில் இருப்பாளோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் பல பெண்களுடன் பழகி இருக்கிறேன். ஆனல் அவளைப்போல கண்டிப்பாக இருந்ததை இதுவரை நான் பார்த்ததே இல்லை. அதற்குப் பின்பும் நான் அவளைப் பார்க்க பலமுறை சென்றதுண்டு. ஆனல், மறந்துகூட அவளைத் தீண்டியது கிடையாது.

கடைசியாக அவளிடம் விடைபெற்றுக் கொழும்பு சென்றேன். என் நண்பனிடம் அவளைக் கண்டதில் இருந்து காதலித்தது வரை கூறி அவளை மணக்க விரும்புவதாகக் கூறினேன். என் ஜாதகம் வேண்டும் என்ருன்; கொடுத்தேன்; ஜெயந்தியைப் போலவே அவனும் வயதுப் பொருத்தம் அத்தனை நல்லாக இல்லை என்று இழுத்தான். நான் பிடிவாதமாக இருக்கவே என் வழிக்கு அவன் வந்தான்.

நண்பனுடன் பலமுறை ஜெயந்தியைப் பார்க்க சென்றேன். சீக்கிரமாகவே திருமணத்தை முடித்துவிட வேண்டும் என்று வேண்டிக்கொண்டதன் பேரில் என் பெற்ருரிடம் அனுமதி பெறுவதற்குச் சென்றேன். அதற்குப் பின்பு அவளை நான் இன்னும் சந்திக்கவே இல்லை. என் பெற்ருேர் என் விருப்பத்தைக் கேட்டதும் எரிமலையென வெடித்தார்கள். அடுத்த வாரமே என் முறைப் பெண் ஒருத்தியின் சழுத்தில் மூன்று முடிச்சுப் போட்டேன் நான். எனக்கு எதுவுமே செய்யத் தோன்றவில்லை. ஜெயந்தியை நினைத்தபோது வாய்விட்டுக் கதறி அழவேண்டும் போல இருந்தது. நிர்மலமாக இருந்த அவள் வாழ்க்கைத் தடாகத்தில் 'காதல்' என்ற கல்லை வீசி அந்த நீரோடையைச் சலனமடையச் செய்ததற்காக மனதார வருந்தினேன். இரண்டு நாட்களாக நித்திரையே வரவில்லை. மூன்ரும் நாள் என்னை மன்னித்துவிடும்படி அவளிடம் கேஞ்சிக் கேட்டு ஒரு கடிதம் வரைந்தேன். என் கடிதத்தைச் சுக்கு நூருகக் கிழித்து என்னை வாயில் வந்தபடியெல்லாம் திட்டுவாள் என்று எனக்குத் தெரியும்..... ஆனல் அப்படி ஒன்றும் நடக்கவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதானமாகப் பதில் எழுதியிருந்தாள். அதை நான் நெட்டுருச் செய்து வைத்துள்ளேன்.

பாலு!

நீங்கள் நினைப்பீர்கள் ஜெயந்தி அழுதகண்ணுடன் இருப்பாள் என்று. இல்லை பாலு என் வாழ்க்கையில் சிறிது சலனத்தை ஏற்படுத்தி விட்டீர்கள் என்பது என்னமோ உண்மை! ஆகவே, இதையிட்டு நான் அதிகந் துன்பப்படவுமில்லை. நீங்கள் நல்ல வாழ்வு வாழவேண்டு மென்பதே என் ஆசை. எங்கள் உறவு என்றும் அக்காள்— தம்பி என்ற முறையில் வளரட்டும்.

'அன்பு அக்காள்'

இந்தக் கடிதம் என்னைச் சாட்டை கொண்டு அடித் தது. இப்போது அவள் திருமணமாகி இரண்டு குழந்தை களுக்கு தாயாராகத் திகழ்கிறாள் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சி... இருந்தும் அவளை என்றாவது ஒருநாள் கண்டு மனப்பூர்வமாக மன்னிப்புக் கேட்கவேண்டும் என்ற ஆசையுண்டு. அவள் தெய்வப் பிறவி. என்னை மன்னித்து விடுவாள். ஆனால் எந்த முகத்தைக் கொண்டு அவளிடம் செல்வது...?

'குவா! குவா!!' என்ற குழந்தையின் அழுகுரல் என் சிந்தனைக்கு முற்றுப் புள்ளி வைத்தது. அதற்கு மேலும் நான் யோசிக்கவில்லை. அறைக்குள் சென்று சில துணிமணி களை எடுத்துப் பெட்டிக்குள் திணித்து பயணத்திற்கு ஆயத் தமானேன்.

''இதென்ன நல்லநாளுமதுவுமாக உங்களுக்கென்ன பைத்தியம் பிடித்து விட்டதா...... இப்போது எங்கே புறப்படுகிறீர்கள்...?'

என் மனைவியின் கேள்விக்கு என்ன பதில் சொல்வது... ''எனக்குப் பைத்தியம் பிடிக்கவில்லை...... ஆனால் பிடித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ள பைத்தியத்தை அகற்றத்தான் இந்தப் பயணம்! சீக்கிரம் நீயும் குழந்தையை எடுத்துக் கொண்டு புறப்படு. எனக்கு ஒரு அக்காள் உண்டு என்ற இரகசியத்தை இதுவரை உனக்குச் சொல்லி வைக்காததற்காக என்னை மன்னித்துவிடு. என்றோ எங்களிடையே ஏற்பட்ட சிறிய தகராறு இதுகாலவரை அவளை மறந்திருக்கும்படி செய்து விட்டது. இப்போது அக்காளைப் பார்க்கப் போகிறேன். இன்றுதான் என் கண்கள் திறந்தன. ம்! சீக்கிரம் புறப்படு...'' அவள் பதிலுக்குக் காத்திருக்காமல் முன்னேக்கி நடந்தேன்... அரைப் பெர்லாங்கு போனதும் திரும்பினேன். என் மனைவி குழந்தை சகிதம் என்னைப் பின் தொடர்ந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரேசியின் அடுத்த வெளியீடு

## ந. பாலேஸ்வரி

எழுதும் முழுநீளச் சரித்திர நாவல்

# 'கோவும் கோயிலும்'

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்டுரைப் பிறப் பிடமாகக்கொண்டு, தற்சமயம் குருக்கள் மடத்தில் வசிக்கும் ஈழத்தில் மூதறிஞரும் தலைசிறந்த கவிஞரும் பேச்சாளரும் ஓய்வுபெற்ற ஆசிரியப் பெருந்தகையுமான **புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்களின்** நூல்பற்றிய கருத்து

ஆர்வத்தால் வளர்ந்த சிந்தனைச் செல்வம்
சிந்தனைச் செல்வத்தை விருத்தி செய்மையால்
கை வந்த கற்பனை வளம். கற்பனை வளத்தால்
களிந்த புனைந்துரைக் கவின், இத்தனையும் துணையாகத்
தேசிய வரலாற்றுப் பின்னணியின் கால் கொண்டு,
ஆங்குதித்த உணர்ச்சி வேகத்தில் வளர்ந்து, விரிவு
பெற்று நிறைதந்த தொடர்கதைச் சித்திரம்

# கோவும் கோயிலும்

கூட்டுறவு அச்சகம், யாழ்ப்பாணம்-361-73

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org